# வெளிச்சம்

வைகாசி - ஆனி 1992

20/-



விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகாலமாக
மக்களின் நன்மதிப்பைப்
பெற்ற நிறுவனம்

**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**

- ☐ ஆண்களுக்கும், பெண்களுக்குமான
- ☐ தயாரித்த ஆடைகள்
- ☐ புடவை வகைகள்
- ☐ சிறுவர் ஆடைகள்
- ☐ வெளிநாட்டுத் துணிவகைகள்

சகலதையும்



எண்ணற்ற விதங்களில்
எண்ணம் போல் தெரிவு செய்ய

**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**


**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**

**LINGAMS SILK HOUSE**

21, நவீனசந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

18, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலை வந்து தாலாட்டும் சிறுதீவு - நாளை
அதி லிரண்டு நாடுகள் இதுதீர்வு
வலை கொண்டு போகிறான் படகோடு - இவன்
வரலாறு காணுவான் திடமோடு,
கடல் வேங்கை எழுந்திட்ட தமிழீழம் - இனிக்
கனவாகிப் போகாது ஒரு நாளும்,
படகேறிப் பலநாடு வென்றவா - புலிப்
படையோடு ஒன்றாகி இன்று வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிச்சம்

வைகாசி - ஆனி 1992
இதழ் - 5

இது வெளிச்சத்தின் ஐந்தாவது இதழ். எமது போராட்டம் போலவே வெளிச்சமும் வர வர மெருகேறி வருகின்றது. நாங்கள் ஆரம்பத்தில் கற்பனைப்படுத்தியது போல அழகிலும் அடக்கத்திலும் வளர்ச்சிகாண வெளிச்சத்தில் இடமிருக்கின்றது. ஆனால் சகல தட்டுப்பாடுகளும் வெளிச்சத்தையும் கட்டுப்படுத்துகின்றன: இதழுக்கு இதழ் விதம் விதமான நெருக்கடிகள் என்றாலும் வெளிச்சம் வெளிவரும்.

ஜூலை மாதம் 5ஆம் தேதி விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் வருடா வருடம் எடுக்கும் முத்தமிழ் விழா மன்னாரில் ஆரம்பமாகின்றது. மன்னார் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று மாவட்டங்கள் தோறும் பரவலாக இடைவெளிவிட்டு பத்துத்தினங்கள் முத்தமிழ் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன.

வன்னிப் பிராந்தியத்திலும் மற்ற இடங்களிலும் முத்தமிழ் விழாவை எப்படி எப்படிச் சிறப்பாக நடாத்தவேண்டுமென்று தாங்களாகவே திட்டமிட்டு மக்கள் செய்து வருகின்றனர். விழாவை வரவேற்கவும், பார்த்து மகிழவும் தயாராகிய நிலையில் விழா நடைபெறும் மாவட்ட மக்கள் ஆவலுடன் காத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐநூறுக்கு மேற்பட்ட கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், விழாவில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர். சென்ற வருடத்தை விட இந்த வருடம் அனுபவத்தை வைத்து, முத்தமிழ் விழாவை செம்மையாகத் திட்டமிட்டுள்ளோம். நிகழ்ச்சி ஒழுங்குகளும் அவசரக்கோலமில்லாது ஆழமானதாக ஆக்குவதில் கவனம் எடுத்துள்ளோம்.

விழா நிகழ்ச்சி நிரல்கள் அச்சாகின்றன. விழாவை தமிழீழத்தின் தேசிய விழாக்களில் ஒன்றாகவே மக்கள் கருதுகின்றனர், எதிரிக்கு இது எரிச்சலை ஊட்டுமென்பது எமக்குத் தெரியும். ஆனால் எமது மண்ணில் நாம் ஆடுவதையும், பாடுவதையும் எவரும் தடைசெய்ய முடியாது. அனுமதியைப் பெற்றுத்தான் ஆடவேண்டுமென்றால்..... அதன் பெயர்தான் அடிமைத்தனம்.

முத்தமிழ்விழா - அடிமை
விலங்குகளை உடைக்கும் விழா
தமிழர் தேசியத்தின் எழுச்சி விழா


எல்லோரும் கூடுவோம்
எதிரிக்கு எதிராகப் பாடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இதழில்......


சிறுகதை ☐ மழைக்கு முன்
எழுதியவர் ☐ ரஷாட் அபு ஷாவர்
தமிழ்ல் ☐ சாந்தன்


பக்கம் - 10


சிறுகதை ☐ தகர்வு
எழுதியவர் ☐ செம்பியன் செல்வன்

பக்கம் - 32


கவிதைகள்


- ☐ மேஜர் பாரதி - 04
- ☐ கருணை மணி - 06
- ☐ தா. இராமலிங்கம் - 09
- ☐ உலகநாடன் - 29
- ☐ மயிலன் - 44
- ☐ ஜெ. கி. ஜெயசீலன் - 52


கட்டுரைகள்


- ☐ பொன். பூலோகசிங்கம் - 08
- ☐ அநு வை. நாகராஜன் - 16
- ☐ ச. நகுலேஸ்வரன் - 24
- ☐ சபா ஜெயராசா - 42
- ☐ கரும்பறவை - 46
- ☐ என். சண்முகலிங்கன் - 54
- ☐ கோ. மகேந்திரராசா - 57



வெளிச்சம்:-
கலை இலக்கிய சமூக இதழ்
வெளியீடு:-
விடுதலைப் புலிகள்
கலை பண்பாட்டுக் கழகம்

இதழ் அமைப்பு:-
இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்
முகப்போவியம்:-
''ரமணி''

உருவாக்கம்:-
''ஆசிரியர் குழு''
அச்சு:-
ம. மரியதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலலையே நீ கூறு

☐ மேஜர் பாரதி

பூமிப்பந்தின்
புவியீர்ப்புக்கு அப்பால்
பிரபஞ்ச வெளியையும்
பிய்த்துச் சென்றது
மீண்டும் ஒரு
வெடி அதிர்வு.

கர்வப்பட்டுக் கொண்டிருக்கும்
கண்களெல்லாம்
கண்டுபிடிக்கட்டும்
அவர்களது
கடுகளவு உடற்கூற்றை.
பெருமையோடு
உரிமை கொள்வோம்
இவர்கள் காம்
மானுடத்தின் தோழரென்று.

ஆராய்ச்சி யாளருக்கெல்லாம்
ஓர்
அவசர வேண்டுகோள்
உங்கள்
ஆராய்ச்சிக்கூடங்களில்
இந்த
அர்ப்பணிப்புக்களை ஆராயுங்கள்,

தானைத்தலைவனின்
பாசப்பகிர்வின்
பாதி இரவும்
மெதுவாகக்கழிய
கரிய இருளில்
காற்றோடு காற்றாய்
கரைந்து போனதை
கடைசியாகக் கண்டது
நீதானே?
வெடிமருந்துப் படகோடு
இவர்களுக்களித்த
இறுதித்தாலாட்டும்
ஈரமுத்தமும்
உன்னுடையதுதானே?
அன்னையை விட
அவர்களை
அதிகமாய் அணைத்தது
நீதானே?

அதனால்தான்
உன்னிடம்
உரிமையோடு கேட்கிறோம்
கடலலையே
நீ
கரையைத்தொடும் போது
எம்மக்களுக்கு
காதோடு சொல்லி விடு
"விடுதலையை வென்றெடுங்கள்
அப்போது அவர்கள் வருவார்கள்"
என்று



"மன்னாரில் பாகைமாறி இராணுவ முகாம் பகுதிக்குச் சென்ற போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் பாரதி எழுதிய கவிதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானம் இசைத்துத் திரிந்த ஒரு விடுதலை "வானம்பாடி"

யாழ் மாவட்ட தாக்குதற் படைப்பிரிவில் இசைக் குழுப் பொறுப்பாளரும், பல தாக்குதல்களிலும் முகாம் முற்றுகைகளிலும் முன்னின்று போராடிய விடுதலை வேங்கையுமான கப்டன் வீரத்தேவன் 30-5-92 அன்றுஎல்லையை மீறிவந்த எதிரியை விரட்டும் போரில் வீரச்சாவடைந்தான்

இச் சண்டையில் எதிரியின் ஒரு கவசவாகனத்தை முற்றாக நாசமாக்கியும், பல இராணுவத்தினரைக் கொன்றும் ஒரு வீரகாவியத்தை எழுதிவிட்டு இந்த வீரவேங்கை மண்ணிலே விழுந்தவன். மிகக் குறுகிய காலத்திற்குள் தன்னுடைய குரல் வளத்தாலும் தாக்குதற் திறத்தாலும் மக்களிடமும் புலிகளிடமும் பெரும் மதிப்பைப் பெற்றவன்.

போராளிகளே எழுதி போராளிகளே பாடிய களத்தில் நின்று வேங்கைகள்' என்ற ஒலிப்பதிவு நாடாவில் 'போருக்குப் போகும் புலிவீரர், தாயினும் மேலான காவலன் யாரடா அலைகடல் மீதிலும் பயணம். எங்களின் தேசம், ஆகிய பாடல்களைப் பாடி பலரின் அன்பையும் பாராட்டுக்களையும் பெற்றவன்.



கப்டன் வீரத்தேவன்
(துரைராஜா - சிவலிங்கம்)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

சுற்றிவர எதிரி சூழ்ந்துள்ள வேளையிலும் இந்த கானம் இசைக்கும் வானம்பாடி பாடிக் கொண்டிருக்கும். பாடிப் பாடி பல போராளிகளுக்கு உற்சாக மூட்டியபடியே எதிரியுடன் போராடிய அழகை பலர் வியந்து கூறுவார்கள். எதையும் இலகுவானதாகவே கருதும் கலகலப்பான சுபாவம் இவனுக்குரியது. எதிரியுடனான இவனது சண்டையும் இப்படிப்பட்டதே!

30-05-92 அன்றும் எதிரியின் கவசவாகனமொன்றைச் சேதப்படுத்திவிட்டு அதிலுள்ள ஆயுதங்களை அள்ளுவதற்காக ஓடிச் சென்றான். அப்போதுதான் வீரத்தேவனை நாங்கள் இழந்தோம். என்றாலும் அவன் பாடிய பாடல்களும், கலகலப்பாக எல்லோருடனும் அவன் பழகிக் கழித்த நாட்களும் மறைந்து போகாது. □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓர் அன்னையின் ஆவல்

கருணைமணி

அன்பு மைந்தனே பிரபாகரா - நான்
அழைக்கும் குரல் உனக்குக் கேட்கிறதா?
உன்போல் ஒரு மகனை ஈன்றெடுத்த - அந்த
உத்தமி நானாக இருக்கக் கூடாதா?

அறுபது வயது ஆகப் போகிறது
அச்சம் என்மனத்தை அரித்துக் கொல்கிறது
பொறுமையும் மறைந்து போகப் போகிறது
புவியினில் என்னுடல் சாயப்போகிறது

ஓரே யொரு ஆசை தீர்த்து வைப்பாயா?
உன்முகந்தன்னைக் காட்டி நிற்பாயா?
உரையடா மகனே உனக்கிந்த உலகில்
உள்ள அன்னையர் ஒருவரா இருவரா?

நானுமுன் னன்னையென் றேற்றுக் கொள்வாயா?
நாளொன்று மட்டுமென் அருகிருப்பாயா?
வான்புகழ் கொண்டவுன் வடிவத்தைக் கைகள்
வாஞ்சையோ டணைத்திட வழிவகுப்பாயா?

களத்தினில் ஏகிய கால்களைப் பிடித்துக்
கனிவுடன் தடவத் தவிக் கிறேன் மைந்தா
உளத்தினில் அமைதி இல்லையே எந்தன்
உயிர் பிரி வதன்முன் தரிசனம் உண்டா?

துவக்கினை ஏந்திய தூய கரங்களைத்
தொட்டுப் பார்க்கத் துடிக்கிறேன் மைந்தா
சவமாக நானும் சரிவதன் முன்னர்
சந்தர்ப்பம் ஒன்று தந்திடுவாயா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமது தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கட்கு
கரவெட்டியைச் சேர்ந்த
அறுபது வயது மூதாட்டி ஒருவர்
தன் ஆவலைச் சொல்லி எழுதி அனுப்பிய
கவிதை இங்கு பிரசுரமாகியுள்ளது."

ஆணைகள் பிறப்பிக்கும் அழகிய வாயை
    ஆசையோடு நான் பார்த்திட வேண்டும்
தூணையொத்த உன் தோள்கண்ட பின்னரே
    துவழும் என்னுயிர் உடலினைத் தாண்டும்

வீரம் பொங்குமுன் விழிகளின் அசைவை
    விருப்பத்தோடு நான் பார்த்ததன் பின்னரே
பாரம் பூமிக்காய் இருந்திடும் என்னுடல்
    பற்றும் தீயினில் சங்கமமாகும்.

நேராய் நிமிர்ந்து நிற்குமுன் நெஞ்சினை
    நேயத்தோடு என்கரம் தொட்டு
ஆரா அன்புடன் வருடிய பின்னரென்
    ஆவி பிரியட்டும் அகிலத்தை விட்டு

அன்று ஓர் அரங்கிலே அன்புடன் காட்சிநீ
    அளித்துரை யாற்றிட அனைவரும் மகிழ்ந்தனர்
என்று நான் அறிந்ததும் ஏங்கியே அழுததை
    எவ்விதம் கூறுவேன் கொஞ்சமாவேதனை?

மேடையில் நீயும் தோன்றுவாய் என்று
    மேதினத் தன்றுநான் மெல்லநடந்து தள்
ளாடிய வண்ணமே ஊர்வலந் தன்னில்
    ஆவலாய் வந்தனன் அடைந்த தேமாற்றமே

கவிதையொன் றெழுதவோ கற்பனை காட்டவோ
    கருதிநான் இவையெல்லாம் எழுதீடவில்லையுன்
செவிகளில் என்குரல் கேட்டெனை அழைத்திடு
    சீக்கிரம் முகத்தைஇத் தாய்க்குநீ காட்டிடு

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்விமர்சனம்

நாக. பத்மநாதன்

எழுதிய

# "வள்ளுவர் வழியில் வீரம் - மானம்"

பொன். பூலோகசிங்கம்

வள்ளுவர் வழி காட்டும் வாழ்க்கை நெறியைக் கைக்கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தமிழுக்கு பன்னெடும் காலமாக தொண்டாற்றி வரும் திரு நாக, பத்மநாதன் அவர்கள் திருக்குறளில்தான் உள்வாங்கிக் கொண்ட அரிய கருத்துக்களில் சிலவற்றை தொகுத்து "வள்ளுவர் வழியில் வீரம் மானம்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார்.

கைக்கு அடக்கமான வடிவமைப்புடன் தமிழ்த்தாய் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ள இந்த நூலின் சிறப்பம்சம் யாதெனில் திருக்குறளின் பரிமாணங்கள் புதிய கோணத்தில் ஆராயப்பட்டு இருக்கின்றன. மானத்திற்கும் வீரத்திற்கும் திருக்குறள் தரும் அழுத்தத்தை திரு. நாக. பத்மநாதன் அவர்கள் சமகால நிகழ்வுகளுடன் ஒத்திசைவாக்கி தமது நோக்கின் முனைப்பை எழுத்தில் வடிவாக்கி சுவைஞர்களுக்கு விம்பப்படுத்தியிருக்கிறார். உதாரணத்திற்கு சில வற்றைக் குறிப்பிடலாம்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு (குறள் 731)

என்ற திருக்குறளை கருப்பொருளாகக் கொண்டு திரு. நாக. பத்மநாதன் அவர்கள் விளக்கம் தருகையில் பகைவரின் படையெடுப்பு நேர்ந்தால் - நாடு அடிமை நிலைக்கு உள்ளானால் - வளம் எங்கே? மகிழ்வுதான் எங்கே? எனவேதான். பகைவர் வரத் துணியாத படை பலம் தேவை.

இதேபோல

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச்செயின் (494)

என்ற குறளுக்கு திரு. நாக. பத்மநாதன் அவர்கள் விளக்கம் தருகையில்
பொருந்திய இடத்தைத் தனதாக்கிக் கொண்டு
பொருந்திய சிறு படையின் முன் பெரும் படைகள்
பல தோற்றதுண்டு

எனக்குறிப்பிட்டதன் மூலம் இந்தியப்படைகள் பெரும்எண்ணிக்கையில் குவிக்கப்பட்டும் தமிழ் மண்ணின் சூழலை அறியாமையாலும் சூழலின் ஒவ்வாமையாலும் தமிழ்ப் போராளிகள் சூழலை இசைவாக்கி கொண்டு பெரும் படையை தோற்கடித்த வரலாற்றுச்சிறப்பு மிக்க நிகழ்வை எமது மனதில் படிமம் கொள்ளச் செய்து விடுகின்றார்,

இந்நூலின் பல இடங்களில் பல நிகழ்வுகளின் காட்சி படிமங்களும் கருத்துச் செறிவுகளும் வாசகர்களுக்கு சுவைபயப்பதாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கைக்கு அதிகாரம் மாற்றுவோம்

தா. இராமலிங்கம்

மழை பெய்து நிலம் அரித்து
பழையபடி வீதி எல்லாம்
குண்டும் குழியும்!


சீராகச் செப்பன் இட்டுத்
திருத்தி அமைப்பதற்கு
எங்கள் கையில் தான்
அதிகாரம் இல்லையே!
சொன்னதைத் தானே
நாங்கள் செய்யலாம்!

போனமாரி முடிந்த பின்னர் தான்
பெரிய கிடங்காய்ப் பார்த்து
ஓட்டுவேலை செய்து முடித்தோம்.
இப்போது என்னவென்றால்
மழைபெய்ய மழைபெய்ய
பாரியவாகனம் உதைத்துதைத்து
ஓட்டுவிட்டுக் கல் பறந்து
பழையபடி வீதி எல்லரம்
குண்டும் குழியும்,

வெள்ளத்தில் வாகனங்கள்
விழுந்து எழும்பி
விழுந்து எழும்பி
ஓடுகின்றபோது
விபத்துக்கு உள்ளாகி
கால்முறிந்து போனவர்கள்
கைமுறிந்து போனவர்கள்
எத்தனை பேர் பாருங்கள்!

வாருங்கள்!
வீதியை முழுமையாய்
கிண்டிப் புரட்டிச்
செப்பனிட்டுச் சீரமைக்க
எங்கள் கைகளுக்கு
அதிகாரம் மாற்றுவோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மழைக்கு முன்

ரஷாட் அபு ஷாவர்

தொலை தூரத்தில் மலைகளைத் தழுவும் நீல வானம். மலை முகடுகளின் புகாரைத் தாண்டி சூரியன் மேலே எழுகிறது. பாறைகளாய், கறுத்து, நெருங்கி, எரிமலை போல் தொடர்ச்சியாக நெருங்குவன போன்ற மலைகள்...... வெறிக்கும் என் (அல்லது வாசகர்) விழிகளுட் புகுவன போல அவ்வளவு அருகில்......
(காட்சி திடீரென மாறுகிறது)

சாம்பல் நிறவானம். அடர்ந்த முகில்கள் பாறைகளை நீரால் விளாசுகின்றன.

மேடைக்கப்பாலிருந்து உரத்த ஓர் குரல்:
வானமே வெடிக்கப் போகிறது

இன்னொரு குரல்: பயப்படாதே, ஆண்டவன் சித்தம்

பொங்குமாகடல் பாறைகளைத் தாண்டிப் பறக்கிறது கர்ச்சிக்கும் அலைகள்: காற்றில் பறக்கும் உவர் நுரைகள் (வாசகர் கண்கள் பனிக்கின்றன. இல்லாமலுமிருக்கலாம்) ஒருகுரல் அழைக்கின்றது; பூனிஸ், நீ எங்கே இருக்கிறாய்?

கண நேர நிசப்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலஸ்தீனிய சிறுகதை
### ஆங்கிலம் வழி தமிழில்

சாந்தன்

மிக விரைந்த ஓர் காட்சி!

வணங்குதல் போல் ஓராயிரம் உடல்கள் வளைந்தபடி... அவர்கள் தலைக்கு மேல் அந்தரத்தில் ஒரு வாள் ஊசலாடுகிறது. மேடைக்கப்பாலிருந்து ஒரு குரல் யூனிஸ்: நீ எங்கே?

முரசுகள் ஒலிக்கின்றன. இறுக இணைத்த தோல்களில் நடுங்கும் கால்கள் மோதிக் கிளம்பும், ஆவேச ஒலிகள்...
மேடைக்கப்பாலிருந்து ஒரு குறிப்பு;

நாம் இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் இருக்கிறோம்.

இடமிருந்தும் வலமிருந்தும் வந்து கூடி. குழப்பத்துடன் நகரும் அணிகள். வாய்கள் திறந்து மூடுகின்றன, அடியிலிருந்து கிளம்பும் குரல்கள் கோபத்தால் சிவந்த முகங்கள்.........

வாசகரே, அவர்கள் சொல்கிறார்கள்: நாங்கள்தாம் பாலஸ்தீனியர் ... நாங்கள் தாம் பாலஸ்தீனியர்...... (ஆனால் நீங்கள் கவனிக்கிறீர்களில்லை) அவர்கள் அழைப்புக்குரல் வலிதாய் மீண்டும் ஒலிக்கிறது. யூனிஸ், நீ எங்கே இருக்கிறாய்?

பயங்கர வெடியோசைகள் எதிரொலிக்கின்றன.

காட்சி மாறுகிறது. வியர்வை பள பளக்க காட்டுக் குதிரைகள் காற்றில் பறக்கின்றன. ஒரு குரல் கட்டியங் கூறுகிறது:

இதோ குதிரைப் படை ..... குதிரைப்படை வருகிறது. குதிரைகள் பாய்ந்து தாக்குகின்றன......

காற்றில் விளாறும் சவுக்குகள்........ ஆயிரம் பொலிசார். சனக்கூட்டத்தின் மேல் பாய்கிறார்கள்......

சில விநாடிகள் அமைதி.

ஒரு தொழில் ரீதியான பேச்சாளன் பேசுகிறான்: சகோதரர்களே! உங்களுக்காக நாம் எதுவும் செய்வோம், நீங்கள் வீடுகளுக்குத் திரும்பி விட வேண்டும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவுக்குகள் பயங்கரமாக விளாறுகின்றன. காற்றில், உற்சாகமாகச் சிறகடிக்கும் பறவைகள் போல் தோன்றும் பாகைகளின் கீழ் குதிரைக்காரர்களின் தலைகள் தெரிகின்றன......

மண் வீடுகளாலான முகாமொன்றின் தொலைத் தோற்றம்.

நூற்றுக் கணக்கான சிறு வீடுகள் வரிசையாக அருகருகே, கதவுகள் அகலத் திறந்தபடி...... சகதி நிறைந்த ஒழுங்கைகள். அவற்றில் மிதிக்கும் - ஆனால் முன்னேறும் - காலடி ஓசைகள்......

பேச்சாளன் குரல், மீண்டும்.

சகோதரர்களே, எமது இதயங்களில் நம்பிக்கை உள்ளது. ஆண்டவன் எம்மோடு, நாம் தாண்டியே தீருவோம்...... இன்னும் ஒரு சில தசாப்தங்கள் மட்டுமே......

எல்லாம் மறைய, ஒரு ஒலிப்பதிவும் கருவி மட்டும். அதிலிருந்து பலமான கரகோஷங்கள்......

(சீழ்க்கைகளுங் கூட) மகிழ்ச்சி ஆரவாரங்கள்......

ஒரு பேச்சரங்கு விரிகிறது. கவிஞனொருவன் ஏறுகிறான். வாய் தடுமாறி

(வழமை போல்) விரல் நுனியில் மெல்ல எம்பி..... ஒலிப்பதிவுக் கருவியிலில் அதே ஒலிகள் கவிஞன். குரல் உரக்கிறது: ஒடுக்கு முறைகள் ஒரு நாள் ஒழியும். உங்கள் வேட்கை அவற்றை வெல்லும்,

கரகோஷங்கள் கவிதையை மூழ்கடிக்கின்றன. முதலாவது சபதம் முடிவடைகிறது.

இரண்டாவது:-

மணற்புயலிடை மிதக்கும் பல கூடாரங்கள். திகைத்த முகங்களுடன் மனிதர்கள் கண்ணீரும் புழுதியும் படிந்த முகத்துடன் மணலிற் பறக்கும் குழந்தைகள். மழித்த அவர்கள் தலைகளிற் காயங்கள் தெரிகின்றன.

ஒரு மெல்லிய பல்லவி:

என் நாடு என் நாடு என் நாடே......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைக்கப்பாலிருந்து ஆத்திரத்துடன் உறுத்தும் குரலொன்று:
பாலையாய்ப் போன நிலம்.

பாலங்கள் உடைந்து, ஆறெல்லாம் சேறாகி காய்க்காத செடிகள், கிளையிலா மரங்கள்......

குழந்தைகள் கண்களில் நீர் பொங்குகிறது. நடுங்கும் ஓர் குரல்-
வெள்ளிடி விழுந்த காலம்......

மேடைக்கப்பால் ஒலிக்கும் குரல்; குழந்தைகள் முகங்கள் கிழன்று போயின
மலை மலையல்ல கறையான் புற்று

உயரமான ஒரு சுற்றுலாப் பயணி காட்சியில் வருகிறான். மூக்கைக்

கைக்குட்டையால் பொத்தியபடி எல்லாவற்றையும் படம் பிடிக்கிறான்.
புற மேடைக்குரல்;-

இந்தச் சுற்றுலாக்காரர்தாம் எல்லாக் கேட்டுக்கும் கால்

விமானங்கள் இரைகின்றன; கம்பீரமான ஒரு மசூதி..... ஒரு ஷேக் ஓடுகிறான்... அருகே குண்டொன்று விழுந்து சுவாலை பறக்கிறது. ஷேக்கின் மேற்பகுதி மட்டும் தெரிகிறது: பயமே உருவாக அவன் திட்டுகிறான்; கோவில்களைக்கூட...... கடவுளே உன் கோபத்தைக் காட்டு...அழி...... அவர்களை நரகத்திற் தள்ளு .....

(இரண்டாம் சபதம் முடிவடைந்தது இறைவன் கோபம் இப்போது ஏன் இப்படி?

தெறித்த இரத்தம் உருச் சிதைந்த ஆயுதங்கள், முகமிலாப் படையாட்கள். கருகிய உடல்கள் .... சாவின் மணம் வாசகர் மூக்கில் நுழைகிறது (ஆனால் அவர்கள் நுகர்புலனை இழந்திருக்கக் கூடும்)

கருகிய உடல்களினின்று புகைத் திரள்கள் எழுகின்றன. அணியாடைகள் இற்று வீழ்கின்றன...... மண்ணில் நிணம் வடிகிறது .....

கட்டளையிடும் ஓர் குரல் அறிவிக்கிறது; அவர்களை அழியுங்கள் உங்கள் பற்களால் உங்கள் நகங்களால் வெருட்சியுற்ற பறவைகள் போலச் சிதறிய சதைத் துண்டுகள் கருகி ஆயுதங்களின் உருக்குச் சில்லுகளுடன் கலக்கின்றன.

ஒரு சிறிய கீதம்:

இரகசியப் பொலிஸ் எங்கள் பற்களைப் பிடுங்கியது

எங்கள் நகங்களை அது இல்லாதொழித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் கைகள் வெறுங்கைகள்

எப்படி நாங்கள் போரிடுவோம்?

காட்சி மாறுகிறது எல்லாம் பச்சை... இளம் பச்சை மயம்... ஆரஞ்சுப் பழங்கள் குவியல்களாக உள்ளன.

குழந்தைகள் போர் விளையாட்டு விளையாடுகிறார்கள் அவர்கள் கைகளில் தடித்துப்பாக்கிகள். மேற்கு நோக்கி... நீட்டிய வாறு...... விமான இரைச்சல்...

ஒரு குழந்தை அலறுகிறது: நாங்கள் அதைச் சுட்டு வீழ்த்தி விட்டோம்...... பாருங்கள், எரிகிறது... இன்னொரு குழந்தை அதை மறுத்து: இல்லை நாங்கள் சுடவில்லை...உனது ஆயுதம் மரக்கட்டை. பொய் சொல்வது பாவம், தெரியாதா?

கூரிய பாறைகள் தோன்றுகின்றன. மறையும் சூரியனின் ஒளியைப் பிரதிபலித்தவாறு...... ஆறு கலங்கலாக ஓடுகிறது. குறுக்கே கடக்கும் ஒரு அசைவு (சிரமப்பட்டுத் தாண்டும் ஒருவனின் பக்கவாட்டுத் தோற்றம்)

கராமே அகதி முகாம். பெண்கள் குழந்தைகள் முதியோர். கைகளால் கண்களுக்கு நிழல் பிடித்தவாறு மேற்கு நோக்கி உற்றுப்பார்க்கிறார்கள் கடக்கும் மனிதனை
பேரோசையுடன் பிழம்புகள் எழுகின்றன. உருக்குத்
துண்டங்கள் சிதறுகின்றன. தீ பரவுகிறது.

கராமே முகாமில் தங்கள் களிமண் குவியல்களிலிருந்து மக்கள் திரண்டெழுந்து வந்து ஒரே குரலிற் பாடுகிறார்கள்.

ஏழைகள் நாங்கள் இங்கிருந்து வெளிக்கிடுவோம்
கோபக்கனலால் கொடுமைகளை நீறாக்க
எதிரிருந்தும் அருகிருந்தும்
எம்மைச் சுடுவோர் இனி நிறுத்தட்டும்

அவர்கள் உறுதியாகச் செபித்தபடி முன்னேறுகிறார்கள்.

தாய்நாட்டு மண் தவிர்ந்த மற்றெந்தத்
துதி வழிபாடும் தரணி மதியாது
பாட்டாளியை விடப் பாட்டுக்குரியவன்
பாரினில் வேறேது
மண்ணுக்காகவும் மகிழ்ச்சி வெளிச்சம் உதிப்பதற்காகவும்
பாட்டால் செத்தான், சாகிறான், சாவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சூரியன் போலவே நாங்கள்
இனிமேல் மேலே எழுவோம்
இன்பம் இச்செகத்தினிற் பொங்கும்
அதனை அழித்தல் இயலாதது போல
எமையும் அழித்தல் இயலாதாகும்
மண்ணின் விதையும் மகிழ்வும் நாமே.

காயமடைந்தோரைக் காவியபடி ஆற்றைக் கடக்கும் மனிதர்கள் மேல் ஒளிருவிகிறது. அவர்கள் பாடுகிறார்கள்;
இலட்சிமே உனக்காக
ஒளியைத் தேடும் குழந்தை விழிகளே உங்களுக்காக
எங்கள் தேசமே உந்தனுக்காக

நேசத்திற்குரிய எம் பாட்டாளிக்காகவும்
மேடைக்கப்பாலிருந்து ஒரு குரல்;

பயமென்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா?
அவர்கள் பாடுகிறார்கள்:

எங்கள் பிள்ளைகளையும் அவர்தம் அன்னையரையும் நாங்கள் பாது காக்கின்றோம்.
வஞ்சகமில்லா அந்தத் தூய முகங்கள்....
பசுந்தாரகைகளையும் பாடல்களையும் நாங்கள் நாடுகிறோம்
ஆனால் இப்போ உயிருக்குயிரே விலையாகிறது.
குண்டாலும் கருத்தாலும் குற்றங்களைத் திருத்துகிறோம்
எங்கள் ஏர்க்கால்கள் தங்கள் தெம்மாங்கை மீண்டுமிசைக்க
அவர்கள் பிரிகிறார்கள் சிலர் மேற்கே. சிலர் கிழக்கே. பச்சை
இரத்தம் தோய்ந்த ஆடைகள், காயமடைந்தோரை காவியவாறே.

எதனுக்காகவும் பாடதே இனிவரும் போர்களுக்கே பாடு.
உங்கள் பாடலும்
உங்கள் பாதையும்
ஒன்றே யாகுக

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாட்டார் இலக்கியத்தில் ஐதிகமும் கரணமும்

அநு. வை, நாகராஜன்

நாட்டார் பண்பாட்டியலில் வாய்மொழி இலக்கியமே முன்னிற்கிறது. வாய்மொழி எனும்போது, நாவினால் வெளிப்படும் ஒலியின் தொகுப்பே அதன் முதலூற்றாகிறது. உள்ளத்தில் எழும் எண்ணக் கருத்துகள் அடிமூச்சாக, உந்திக் கமலத்தினின்று புறப்பட்டு, குரல் வளை எனும் மூச்சுத் தொடுவாயின் ஊடே ஏறி இறங்கி, நாவினால் வெளிப்படும்போது ஒலி பிறக்கிறது. சாதாரணமாக அவ்வொலி அசைவு, சொல்லாகி - சொற்றொடராகி - உரையாகிய மொழியாகிறது. அதேயொலி, ஒருவகை ஒத்திசைவில் சுருதி லயத்தோடு புறப்படும்போது இசை எனக் கொள்வோம். முன்னையதை, வசனம் - உரை - கட்டுரை - கதை என்றும்; பின்னயதை கவிதை - செய்யுள் - பாடல் என்றும் அழைப்போம்.

இவ்வண்ணம், உரையாலும் செய்யுளாலும் (பாடல்) புறப்படும் உள்ளக் கருத்துக்கள், தனித்தனி வடிவங்கள் பெற்று, பிறர்க்குச் சுவையூட்டப் பரிமாறப் பெறும் போது, அவை கலை வடிவம் பெறுகின்றன.

இத்தகைய வாய்மொழிக் கலை வடிவங்கள், கிராமத்தில் இயல்பாக - இயற்கையைத் தழுவி நிலவுவதால், அவை தனித்துவமான நடையிற் பயிலப் பெறும். அந்நிலையில், கிராமத்து மக்களின் வாய்மொழியாக வெளிவரும் உரையும் செய்யுளும் முறையே நாட்டார் உரை வழக்குகள் எனவும்; நாட்டார் பாடல்கள் எனவும் ஆய்வாளர்களால் வகுத்துக் கூறப்பெறுகின்றன. பொதுவாக - மொழியியல் (*Philology*) வரலாற்றினை நோக்குமிடத்து, உரைநடை மொழியின் முதற் பிறப்பாயினும், செய்யுணடையே இலக்கியத்தின் முதல் வித்தாகும். முன்னாளில் - உரைநடை வடிவத்திலும் செய்யுணடை (கவிதை) வடிவமே இலக்கியத்துக்கு வித்திட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், சொற்சிக்கனமே ஏனெனில் - விரிவான கருத்தை நினைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்தவும் அதனை மற்றவர்களுக்குப் பரிமாறவும் சுருக்கமான சொன்னடை அவசியமாகிறது. அதுவே, தாள - லய - சுருதியுள்ள ஓசையுடன் சீராகி இசைய, எதுகை மோனைச் சொற்களாகிய அடியும் தளையும் பெற்றுச் சத்தங்களாய்ப் பிறக்கின்றன. சந்தத்தோடு இணைந்த சொற்கூட்டம் பாடலாகிறது: மக்கள் மத்தியில் வழிவழியாகப் பயிலப் பெறவும், பயன்படுத்தப் பெறவும் அவை ஓர் இலக்கிய வடிவத்துள் அமைகின்றன.

கிராமத்து மக்கள் ஏட்டுக் கல்வியற்றவர்கள். எழுத - வாசிக்கத் தெரியாதவர்கள். ஆயினும், சொன்னதை - கேட்டதை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி நினைவுப்படுத்தும் ஆற்றலுடையவர்கள், அந்தவகையில், கிராமத்தவர் தமது மூத்தோர்கள் சொன்னதைச் சொல்லி, மன திருத்திக் கொள்ளும் ஆற்றல் உடையவர்களாக இருப்பார்கள். அத்துடன் அவர்கள், சொல் - சொற்றொடர் என்பனவற்றைச் சந்தம் - லயம் - சுருதியுடன் இசைக்கவும் வல்லவர்களாகவும் இருப்பார்கள். அதுவே பழக்கத்தில் வழங்கி வர - மரபாகி விடுகிறது. இவ்விதம், நாட்டார் இடையே செவி வழியாகவும் வாய்வழியாகவும் நீண்டகாலம் பின்னிப் பிணைந்த நாட்டார் வழக்குகளே மேற்சொன்ன நாட்டார் இலக்கியம்

இவ்வாறு, கிராமிய மக்களிடையே பண்டு தொட்டு வழங்கி வரும் வாய்மொழி இலக்கியங்களை ஆங்கிலத்தில் *Folklore* அல்லது *Folksongs* என்பர். இத்தகைய பாடல்களை தமிழில் இசைகருதியும் சந்தங் கருதியும் 'ஆனந்தக் களிப்பு', 'கண்ணி'' 'கீர்த்தனம்', 'கும்மி', 'கோலாட்டம்'' 'சிந்து', 'நொண்டிச் சிந்து', 'தெம்மாங்கு'' என இலக்கியக்காரர் வகைப்படுத்தி வைத்துள்ளார்கள். ஒவ்வொரு வகைக்கும் தனித் தனி அமைப்புகளும் கட்டுமாணங்களும் உள்ளன என்றும் நவீன இலக்கணகாரர்கள் அவற்றுக்கு இலக்கணமும் வகுத்துள்ளார்கள். இப்பாடல்கள் அமைப்பிலும்

இன்று இயந்திர உற்பத்தி சாதனங்களின் உதவி காரணமாகவும், பிற காரணங்கள் காரணமாகவும் மரபு புறம் போக்கப்படுகிறது. ஆயினும், அதன்வழி ஐதிசமரபுகளும், கரணங்களும் கிராமியக் கலைகளிலும் அநுட்டானங்களிலும் இருக்கவே செய்கின்றன. மரபு பேணும் சமுகத்திலும், பண்பாடு போற்றும் பாரம்பரியத்திலும் இவை தேவையெனக் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திலும் பல்வகைப்படுவன. சிறு துணுக்குகள் போலும், பெருங் கதை கூறும் காவியங்கள் போலும் அவை இருக்கின்றன. இவை, பெரும்பாலும் மக்கள் ஓய்வாயிருக்கும் பொழுது மட்டுமன்றி அவர்கள் அலுவல்களில் ஈடுபடும் வேளைகளில் அலுப்பும் சலிப்பும் நீங்கப் பாடி ஆடி மகிழும் பொழுதும் முகிழ்க்கின்றன. அரிவி வெட்டுப் பாடல்கள், வள்ளைப் பாடல்கள் என்பன இத்தகைய பாடல்களுள் அடங்கும். மேலும், ஆணும் பெண்ணும் சேர்ந்து தொழில் புரியுங்கால், தமக்குள்ளே உற்சாகம் ஊட்டிக் கொள்ளவும் புத்துணர்வு மீட்டிக் கொள்ளவும் காதற் பாடல்கள் ஏசல்கள் - வக்கணைப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள் போட்டிப் பாடல்கள் என்பனவற்றையும் இசைத்துப் பாடுவர். இன்னும், ஊஞ்சல் - கோலாட்டம் தாலாட்டு வாழ்த்து - ஒப்பாரி போன்றவற்றையும் பாடுவர். இவை தவிர - வேடிக்கை விளையாட்டுகள் பண்டிகைகள், களியாட்டங்கள், கடவுள் வழிபாடுகள், விழாக்கள், சடங்குகள் போன்ற வேளைகளிலும் பாடி ஆடுவர். இவற்றோடு தமது கிராமத்துத் தெய்வங்கள் - வீரர்கள் பற்றியும் கதை கூறும் பாணியில் கதைப் பாடல்கள், கூத்துப் பாடல்களும், உண்டு.

இவற்றை நோக்கும் பொழுதும், நாட்டார் பாடல்கள் பல்வேறு சூழ்நிலைகளுக்கும் ஏற்ப - பல்வேறு வகையிலும், அளவிலும் பல்சுவைக் களஞ்சியங்களாக அவை விளங்குவதைக் காணலாம். இதேபோல் - நாட்டார் உரை வழக்குகளும் பேச்சு வழக்கில் பழமொழிகள், விடுகதைகள், நொடிகள், குயுக்தி வினா விடைகள், வேடிக்கைக் கதைகள். கர்ணபரம்பரைக் கதைகள் எனப் பெரியதொரு பட்டியலே இங்கு எம்முன் நீண்டிருப்பதைக் காணலாம்.

இத்தகைய கிராமத்து இலக்கியங்கள் பெரும்பாலும், சமயம் சார்ந்த ஐதிகங்களுடனும் கரணம் எனப்படும் சடங்கு - கிரியை (*Rituals*) களுடனும் இணைந்தே வழங்கி வருவதைக் காணுகிறோம்.

## ஐதிகமும் கரணமும்

இவ்விடயத்தில், ஐதிகம் - கரணம் பற்றிய விளக்கத்தை முதற்கண் நோக்குவது நல்லது. முன்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்வை மீண்டும் நினைவுப்படுத்தி, அதனை அதே பலன் மீண்டும் கிட்டும் என நம்பிச் செயற்படும்போது. அதனை ஐதிகம் என்போம். இது, நம்பிக்கையின் அடிப்படையில் அமையும். கரணம், பிறிதொரு வகையில்-பாரம்பரியச் சமயங்கள் அல்லது நம்பிக்கையுடன் தொடர்புள்ள அநுட்டானங்களாக, செயன் முறையின்பாற் படுகின்றது. இஃதோர் ஒழுங்கில், அமைப்பாகவும் தொகுதியாகவும் அமையும். ஐதிகங்களின் அடியாகவும், நம்பிக்கையின் அடியாகவும் வரும்போது கரணமும் ஐதிகமும் பார்வையாளர்களுக்கும் அவற்றை செயன்முறையில் நிகழ்த்துவோர்களுக்கும் பொதுவாக சமூக - ஒழுங்கமைப்புகள் - சமய நடைமுறைகள் என்பன நம்பிக்கைகளால் உணர்த்தப்படுகின்றன. மேலும், பிறிதொரு வகையில் இதனைக் கூறுவதானால், பாரம்பரியச் சமூகங்களின் பண்பாட்டுக் கோலங்களை எளிதில் இனங்காண உதவும் ஊடகமே, இவை எனலாம். இக்கருத்தினையே தொல்காப்பியரும், கரணத்துக்கு இலக்கணம் கூறும்போது-

''பொய்யும் வழுவும் எய்திய பின்னர் ஐயர் யாத்தவர் கரணமென்ப'' (தொல். பொருள். அதி, சூத் 4) எனக் கூறுகிறார். உருத் பெனடிக்ற் (*Ruth Benedict*) என்ற ஆய்வாளரும், கரணம் பற்றிக் கூறுமிடத்து

''சரணம் என்பது நிருணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனி மனிதனின் சுயமான ஆக்கமாகவோ - பண்பாட்டினுடைய தனிச் சிறப்புக் காரணமாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்களில் அன்றி, கர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணங்களிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றன.'' என்று கூறுகிறார். இதனை யேடுர்கைம் (*DURKHEIM*) என்பவரும்

''கரணங்கள் புனிதப் பொருள்களின் முன்னால் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் கூறும் விதிகள்.''

என்றும்; வான்கெனப் (*VANGENNAP*) என்பவரும்

''பிறப்பு - திருமணம் - இறப்பு முதலிய மனிதனுடைய வாழ்க்கைக் கட்டங்களிற் செய்யப்படும் கரணங்களை ஒரு வகையில் வகைப்படுத்திக் கூறும் பாடல்கள்'' (*Ritual Passages*) என்றுங் கூறுகிறார்கள்.

இதற்கிணங்க, எமது ஐதிகங்களையும் கரணங்களையும் நோக்கும்போது, அவை

1. சமயம் சார்பானவை,
2. மாநுட வாழ்வு சார்பானவை

என இரு பெரும் பிரிவுகளுள் அடங்குகின்றன. இவை, சமூக - பொருளாதாரச் சூழலுடன் இயைபு பெற்றிருக்கும். ஆதலின், அவை நிலைத்திருக்கும் வரை இவ்வைதிகங்களும், கரணங்களும் உறுதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும். இவை பெரும்பாலும், கோயில் உருவாக்கம் (தலபுராணம்) பேய் பிசாசு வழிபாடு சிறு தெய்வ வழிபாடு - மூதாதையர் (பிதிர்) வழிபாடு - வயல் வெளி, தெருவோரத் தெய்வ வழிபாடு எனப் பல்வேறு ஊடகங்களுக்கு ஊடாக வெளிப்படும். மனிதன் குழந்தையாய்ப் பிறந்தது முதல், அவன் முழு மனிதனாகி முதுமையில் இறக்கும் வரை நாளாந்த வாழ்வில் ஒவ்வொரு சிறு சிறு செயலிலும் பற்பல ஐதிகக் கோட்பாடுகளுடனேயே வாழ்கிறான். பிறப்பு திருமணம் - மரணம் போன்ற சந்தர்ப்பங்களில் பல கடமைகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

அக் கடமைகளே நாளடைவில், பாரம்பரிய - மரபு வழியான சடங்காகவும் - காரணமாகவும் பரிணமித்து இருக்கின்றன. இவை குறிப்பாக, கிராமியச் சூழலில் மிகவும் இறுக்கமாகவும், நுணுக்கமாகவும், மரபு குலையாமலும் பேணப்படுகின்றன. இன்று இயந்திர உற்பத்தி சாதனங்களில் உதவி காரணமாகவும், பிற காரணங்கள் காரணமாகவும் மரபு புறம் போக்கப்படுகிறது. ஆயினும், அதன்வழி வந்த ஐதிக மரபுகளும், கரணங்களும் கிராமியக் கலைகளிலும் அநுட்டானங்களிலும் இருக்கவே செய்கின்றன. மரபு பேணும் சமூகத்திலும், பண்பாடு போற்றும் பாரம்பரியத்திலும் இவை தேவையெனக் கருதப்படுகின்றன- அந்த வகையில்

நாட்டார் இலக்கியத்தில் ஐதிகமும் கரணமும் எந்த நிலையில் ஊடுருவி நிற்கின்றன, என்பதை ஈண்டு நோக்குவோம்

## தாலாட்டு

குழந்தை பிறந்த முப்பத்தோராம் நாளில் 'துடக்கு (தீட்டு) க் கழிவுகள்' நிகழும். இதனையடுத்து ஏணைகட்டி (சீலையால் தொட்டில்) குழந்தையை இதிலிட்டு ஆட்டுவர். அப்பொழுது, மரபு வழியாக தாய் தாலாட்டுப் பாடி, குழந்தையை வாழ்த்துவாள். அப்பாடலில், அவள்

' ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ
கண்ணே உறங்குறங்கு கண்மணியே நித்தி
- ரைகொள்
நித்திரைக்கோ நீரழுதீர் நித்திரைப்-
பூந்தோட்டத்திலே
தொட்டிலுமோ பொன்னாலே - தொடுகயி
- றோ முத்தாலே
பச்சை இலுப்பை வெட்டி - பால்வடியத்
- தொட்டில் கட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின்ன விதைவிதைத்து, தம்பிக்கு - தேன்
- மொழியைக் காவல் வைத்து,
அறுக்கப் பதமாச்சே என் கண்ணே - தேன்
- மொழியைக் களத்தில்
ஆராரோ ஆரிவரோ- கண்ணே உறங்குறங்கு
கண்மணியே நித்திரைகொள் ....

எனப் பாடுகிறாள். இது மரவுவழி வந்த ஒரு கரணம். கால மாற்றத்தால் அது இடம்மாறி விட்டது. பின்பு, வீட்டு மூதாட்டி பாடிய அந்ததாலாட்டும், காலத்தின் கோலத்தால் இன்று அது மறைந்து நிறகிறது.

## நாவூறு - கண்ணூறு கழித்தல்

இங்கு, குழந்தையோடு தொடர்புள்ள இன்னுமோர் ஐதிகக் கரணத்தையும் நோக்குவோம். குழந்தை சில வேளைகளில் இரவில் - அமைதியாக நித்திரை கொள்ளாது, திடீர் திடீரென்று விழித்து விட்டு வீரிட்டு அழும். இதற்குக் காரணம், நாவூறு நாவாசக்தி - கண்ணூறு என்று கூறுவார்கள். அதற்காக, ,திருஷ்டி கழிப்பர்'. அப்பொழுது - முதிய பெண் அல்லது தாய் வாய் பேசாது மூன்று செத்தல் மிளகாய் மூன்று உப்புக்கட்டி மூன்று வேப்பிலை என்பவற்றை எடுத்து வந்து, குழந்தையின் உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை தடவி அடுப்பங்கரைக்குச் செல்வாள். அந்நேரம், அவள் வாய் திறந்துவாய் மொழியாக,

பிள்ளயப் பாத்தவ - பறைஞ்சவ,
எல்லாற்றை வெள்ள முழியிலயும்
முள்ளுக் குத்த முள்ளுக் குத்த......

எனக் கூறி, அப்பொருள்களை நெருப்பில் இட்டு எரிப்பாள். அதன் பின், அவை எரிந்த சாம்பரை எடுத்து வந்து - பிள்ளையின் நெற்றியிற் பூசி, உடலிலும் ஊதுவாள். அதனையடுத்து பிள்ளையும் அமைதியாகக் கண்ணுறங்கும்.

## பூப்பு நீராட்டு

பெண் பிள்ளை பூப்படைந்ததும், உடனே தாய் மாமன் மனைவி - மாமியார் அங்கு வந்து, வீட்டுக் கூரையில் மூன்று முறை தட்டி, அதில் மூன்று ஓலைக் கீறுகளை முறித்தெடுப்பாள். பின்பு பிள்ளையைக் குப்பைப் மேட்டில் நிற்பாட்டி, தான் முறித்தெடுத்த ஓலைக் கீறுகளை அதன் காலடியில் இட்டு 'உடன் தண்ணீர்' அல்லது 'குப்பைத் தண்ணீ' எனும் நீரை வார்ப்பாள். அதன் பின், பிள்ளையை வீட்டுக்குள் அழைத்துச் சென்று ஒரு மூலையில் இருத்தி விட்டு, வீட்டு வாசலில் வேப்பிலை சொருகித்தொங்க விடுவாள். பிள்ளையின் பூப்பு நாளிலிருந்து பதினைந்தாம் நாளன்று, 'புனித நீராட்டு விழா' அல்லது 'சாமத்தியச் சடங்கு' நடைபெறும். அந்நேரம், பல்வேறு வகையான உணவுப் பண்டங்கள் சமைத்தும் - செய்தும் கழிப்புகள் செய்வர். இப்பதார்த்தங்கள். நெல் சாமை - தினை போன்ற தானியங்களிற் செய்யப் பெறும். இவற்றுள் முக்கியமாக பால்உரொட்டி, பிட்டு, களி என்பன தவறாது அடங்கும். அதுவும், இரட்டை எண்ணில் (14, 16, 18......) ஆராத்தியாக அமையும். இவ்வாராத்திகளில், வெற்றிலை பாக்கு - பழம் - மஞ்சள் - குங்குமம் - மலர் போன்ற பொருள்களும்; தூப - தீபங்களும் அடங்கும். இவையனைத்தும். பிள்ளையின் பாதாதி கேசம் ஆக கீழிருந்து மேலும், மேலிருந்து கீழுமாக ஆராத்தியாக எடுத்து சிரசுக்குப் பின் புறமாக தானமாக வழங்கப்படும். இவ்வாராத்தி நிகழ்வு, ஒரு 'திருஷ்டி கழிப்பு' நிகழ்வாகவும், பேய் பிசாசு பார்வையில் இருந்து தூய்மை பெற 'சுத்திகரிப்புச் சடங்கா' கவும் (*Purification*) கருதப்படும்.

இந்நிகழ்வில் - ஆராத்தியோடு, கும்மி ஊஞ்சல் போன்ற கேளிக்கைகளும் நிகழும். அவ்வேளையில், ஆராத்திப் பாடல்களும் வாழ்த்துப் பாடல்களும் வாய்மொழி இலக்கியமாக பாடப் பெறும். குறிப்பாக - குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக் கடமை உரித்துடைய மூதாட்டியே (சுமங்கலி) முன்னின்று

கன்னியர்கள் ஏந்திவர பாக்காலே - ஆலாத்தி
பாவையர்கள் ஏந்திவர வெத்திலையாலே - ஆலாத்தி
வேதியர்கள் எந்திவர சோத்தாலே - ஆலாத்தி
மூதாதையர்கள் ஏந்திவர மஞ்சளாலே - ஆலாத்தி
மங்கையர்கள் ஏந்திவர மணப்பெண்ணே - ஆலாத்தி

என்று வாழ்த்தி ஆராட்டுவாள்.

## திருமண வாழ்த்து

கிராமத்துத் திருமண வைபவங்களில்; 'அம்மிமிதித்தல்' பாடல் எனும் வாய்மொழி வாழ்த்துப்பா பாடுவதுண்டு. அந்நேரம்

'அம்மி முன்பாக - அரசாணி முன்பாக
சுற்றி வலமாக - சூரியன் முன்பாக

அம்மி மிதித்து. அருந்ததியைத்தான் - பார்த்து
ஆல்போல் தழைத்து - அறுகுபோல் - வேரோடி
மூங்கில்போல் தழைத்து முறியாமல் வாழ்ந் - திடுங்கோ
தாழையினம் போல் தழைத்து - நீவீர் - வாழ்ந்திடுங்கோ
மக்கள் நலனைப் பெத்து மகிழ்வுடனே - வாழ்ந்திடுங்கோ
செல்வம் பெருகிட சீராக வாழ்ந்திருப்பீர்
என்றும் சிவன்பாதம் மறவாமல் வாழ்ந் - திடுங்கோ
சக்தியுமை பாதம்தாள் பணிந்து வாழ்ந் - திருப்பீர் ....

என்று வாயார, மனமார வாழ்த்தி மகிழ் - வர்.

## ஒப்பாரி இசைத்தல்

இழப்புக்களால் ஏற்படும் கவலைகளை மனதில் வைத்து அடக்காமல் அழுது தீர்த்தல் எமது வழக்கம். அதனால், ஆறுதல் பெறலாம் என்பது எமது முன்னோர் கண்ட ஓர் உண்மை. குறிப்பாகப்- பாசமுள்ளோர் இறந்தால், எமது தாய்மார்கள் 'ஒப்புச் சொல்லி' அழுவார்கள். அதாவது, இறந்தவரின் அருமை - பெருமைகளையும் திறமைகளையும் ஒப்பீடு செய்தும்; உவமித்தும்; சொல்லுதலேயே இது சுட்டும். இக்கலை, எமது கிராமத்து தாய்மார்களுக்குக் கைவந்த கலையாகும். பெரும்பாலும் கிராமத்து மூத்த தாய்மாருக்கு ஒப்பாரி' தெரியும். ஆயினும், ஊருக்கு ஓரிருவர் இதில் தேர்ந்த ஞானம் தேர்ச்சியும் உள்ளவர்களாக இருப்பார்கள். மரண வீட்டில் ஒப்பாரி ஒரு கரணமாகவும் கருதப்படும். இதன் காரணமாகவும் சில வேளைகளில் இதனை ஒரு தொழிலாகவும் தாய்மார் சிலர் செய்வதைக் காணுகிறோம். (மரணவீடுகளில் கூலிக்குத் தேவாரம் பாடுவது போல்) அத்தகைய தாய்மாரை 'கூலிக்கு மாரடிக்கும்' பெண்கள் என்ற முதுமொழி இன்னும் வழக்கில் வழங்குகின்றது. இவ்வொப்பாரி இறந்தவரின் உறவுக்குத் தக்கபடி தந்தை புலம்பல் - தாய் புலம்பல் - மனைவி புலம்பல் - கணவன் புலம்பல் - பிள்ளை புலம்பல் எனவும்; உற்றார் - உறவினர் அண்டை அயலவர் புலம்பல் எனவும் அவை அமையும்.

கிராமியத் தாய்மாரின் தாலாட்டுப் பாடல் போல் ஒப்பாரிப் பாடலும் மிகவும் பொருள் ஆழம் - சொல்வளம் - செறிந்த வாய்மொழி இலக்கியமாக விளங்குகிறது. ஒப்பாரிப் பாடல்களில் உவமையணி - உருவக அணி, நனி சிறக்க இருக்கும். எடுத்துக் காட்டுக்கு ஓரிரு பாடல்களை இங்கு நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 ''பச்சைக்கிளி வளர்த்தோ - நாங்கள்
பசுங்கிளியை அனுப்பி விட்டோம்
மதுரங்கிளி வளர்த்தோ - நாங்கள்
மதுரைக்கோ அனுப்பி விட்டோம்
ஊரெல்லாம் செவ்விளனி - உலாவிப் பறி
யாமல்
பாவியர் செவ்விளனி - பார்த்துப் பறிச்
சினமே......

2 ''கொல்ல வந்த இயமனுக்குக்
கோழிப்பலி தாரமெண்டம்
கோழிப்பலி வேண்டாமென்று,
குழந்தை பலி கேட்டினமே
ஆட்டுப்பலி தாரமெண்டம்
ஆடுபலி வேண்டாமென்று
எங்கன்ரை ஆண்டவனைக் கேட்டினமே...

3 ''வாவென்று அழையாமல் - எங்கள்
வரிசையில் வந்து நிற்பாய்......
கூப்பிட்டு அழையாமல் எங்கள்
குடிசையிலே வந்து நிற்பாய்......
முத்தம் வெளியாச்சு - எங்கள்
முன்கூரை பாழாச்சு
ஆடி வந்த பம்பரமே - இனி
ஆடி ஓய்ஞ்சாச்சு......

இதேபோல்- இறந்த சடலத்துக்கு இறுதியாகச் செய்யும் ஒரு கரணமே வாய்க்கரிசி இட்டு அழுதலாகும் இவ்வேளையில்-

1 ''சுத்தி வந்து வாய்க்கரிசி
உரிமையுடன் போட்டிடுவோம்
வாழ்த்தரிசி போட்ட கையால்
வாய்க்கரிசி போடுகிறமே......

2 ''நெல்லுப்பொரி பொரிச்ச.
நெருஞ்சிப் பூப்பாடை கட்டி,
சோவப் பொரி பொரிச்சு
சொக்கட்டான் பாடை கட்டி,
அன்னமிட்ட கையாலே - அள்ளி இட்
டேன் வாய்க்கரிசி
சோறிட்ட கையாலே - சொரிஞ்சு இட்
டன் வாய்க்கரிசி .....

என்றும் பாடி அழுவார்கள்.
இந்த வகையில்-

பிறப்பு முதல் இறப்பு வரை எமது நாட்டார் இலக்கியச் சோலையில் பன்மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன என்ன புதுமையும் மோடியும் புகுந்த போதிலும் எமது சமூகத்தில் அவை என்றும் வாடா மலர்களே,

☐ ☐

பல்லாயிரக்கணக்கான அகதிகள் அவர்களது சொந்த வீடுகளின் வாசலைக்கூட காணமுடியாமல் இருக்கிற சூழ்நிலையிலும், அவர்கள் மௌனத்துள் மூழ்கிப் போவார்களா? வாய்மூடி வாழ்ந்து முடிப்பார்களா? அப்படியானால் அதைவிட எதிர்காலத்திற்கு எதிரான அநியாயச். செயல் வேறென்ன இருக்க முடியும்,

''தாய் நாடு எனும்
தொட்டில் பறிபோன போது''
சூல் கம்ச தோவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கம் கொடுப்போம்!**
**தன்னிறைவுப் பாதையில் வீறுநடை போடுவோம்!**

# பனை வெல்லம்

தமிழீழத்தின் சுய பொருளாதாரத்தைக்
கட்டியெழுப்ப தேசிய உற்பத்தியாம்

## பனை வெல்லத்தை

அனைவரும் பாவிப்போம்

*''எத்தனை எத்தனை இனிப்புகள் வந்தாலும்*
*அத்தனையும் விடப்பெரு அமுத மன்றோ*
*இத்தரை மீதினில் எழுந்த பனை*
*சத்தெனத் தரும் சர்க்கரை வெல்லம்.''*

# பனை வெல்லம்

**விசேட விலை குறைப்பு**
**ஒரு கிலோ ரூபா 40/- மட்டும்**

உற்பத்தியாளர்கள்:

**தெங்கு பனம்பொருள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**
**(மட்டுப்படுத்தப்பட்டது)**
**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எந்தையும் தாயும்"

## நாடகம்

## சில கருத்துக்கள்

ச. நகுலேஸ்வரன்



பெருத்த அரங்குகளில், இருளும், நிசப்தமும் நிலவும் சூழலில், வண்ணமிழைத்த மேடைகளில் ஆடப்படுவது மட்டுமே நாடகம் என்ற எண்ணம் எம்முள் நிலைத்து விட்ட ஒன்று. இத்தகைய அரண்களே நாடகத்தை உயிருள்ள தாக்குகிறது என்ற நம்பிக்கையும் நிலைத்து நிற்கின்றது.

வண்ண மிழைத்த மேடைகளில் மட்டுமல்ல, நாடகங்கள் எந்த இடத்திலும் பிறக்கும், மக்கள் வாழும் அனைத்து இடங்களிலும் வீரியமுள்ள நாடகங்கள் பிறக்கின்றன. என்பதை, ஒரு வீட்டினுள்ளே நாற்சார் முற்றத்தில், நிகழ்ந்த ''எந்தையும் தாயும்'' என்கின்ற இந்த நாடகம் புலப்படுத்தி விடுகிறது.

சிறிய அயலொன்றினை முரண்பாடுகள் மலிந்த முழுச் சமூகத்தின் வெட்டுமுகமாக, இந்த நாற்சார் முற்றத்தில் நிறுத்திப் படைப்பாளர் தனது நுண்ணுணர்வால் நுணுகி ஆய்வு செய்கின்றார். இதுவே இங்கு ஒரு நிகழ்த்து கலையாகிறது. பார்வையாளரிடத்து, ஒரு உயிருள்ள தொடர்பை, ஒரு புலனனுபவத்தை உருவாக்கி விடுகிறது. பட்டப்பகலில், ஆற்றுவோரும், அவையோரும் சுற்றிச் சூழ்ந்து நெருங்கி இருந்த போதும், வெற்று வெளியான இந்த நாற்சார் முற்றமும் உயிர்ப்புள்ள அரங்கமாகியது.

எமது பண்பாட்டுத் தளத்தில் நின்று கொண்டே, எமது சமூகமும், சமூக விழுமியங்களும், எப்படியெல்லாம் சிதைகின்றன. சுக்கு நூறாக உடைக்கப்படுகின்றன. என்பதை யதார்த்த நிலையில் நாடகம் விளக்குவது ஒரு வகையாகவும்.

பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு, தள்ளாமையிலுந் தனிமையிலும் பரிதவிப்போரை உயர்ந்த உளவியல் நோக்கில் நுணுகி ஆராய்ந்து, அவர்களது பரிதவிப்பை, ஏக்கங்களை படம் பிடித்துக் காட்டி, மனித வாழ்வில் தனிமை, அதுவும் தள்ளாமையில் தனிமை எத்தகைய கொடூரமானது என்பதை பார்வையாளரை உணரச் செய்வதும். அலசச் செய்வதும் இன்னொரு வகையாகவும் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறிய அயலொன்றினை முரண்பாடுகள் மலிந்த முழுச் சமுகத்தின் வெட்டு முகமாக இந்த நாற்சார் முற்றத்தில் நிறுத்திப் படைப்பாளர் தனது நுண்ணுணர்வால் நுணுகி ஆய்வு செய்கின்றார்

● ●

"நாற்சார் முற்றத்தின் முன்றுபுற திண்ணைகளும் பக்கத்து அறைகளும், தனித்தனியே குடும்பங்களின் வாழ்விடங்களாகின்றன, படுக்கையறை, இருப்பிடம் சமையற்கூட்டு, பாதைகள் இப்படி ஒரு வாழ்வியற் சூழலில் இந்த நாடகம் நிகழ்த்தப்படுகிறது.

கருத்தமைவு, பாத்திர வார்ப்பு, பாத்திரங்களை அதனதன் பண்புகள் சிதையாது நடிக்கின்ற நடிகர்களின் நடிப்பாற்றல் அத்தனையும் வீடொன்று நாடக அரங்காக உருப்பெறுவதற்கான, வளங்களாக அமைகின்றன. இந்த வளங்களனைத்தையும் பயன்படுத்தி, இந்த நாடகத்திற்கூடாக நெறியாளரும் தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். இவரது நெறியாள்கையில் படைப்பாளரின் உளவியல் நோக்கும் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது.

தனது பதினொரு பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு தள்ளாமையிலுந் தனிமையிலும் வாழும் பெரியய்யா, பெரியய்யாவினது இடதுகை ஓரத்து அயலாக, பெரியய்யாவிற்கு உதவியாகவும் ஒத்தாசையாகவும் வாழ்கின்ற ஒரு மகனையும், ஒரு மகளையும் தந்தையையும் கொண்ட குடும்பம், பெரியய்யாவினது வலதுகை ஓரத்து அயலாக பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு முதுமையில் வாழும் கணவன் மனைவிக் குடும்பம். இந்த மூன்று குடும்பங்களையுங் கொண்ட சிறிய அயலே, நாடகத்தின் கதாமாந்தர்களாகின்றனர்.

நாற்சார் முற்றத்தின் மூன்று புற திண்ணைகளும் பக்கத்து அறைகளும், தனித்தனியே குடும்பங்களின் வாழ்விடங்களாகின்றன. படுக்கையறை இருப்பிடம் சமையற்கூட்டு, பாதைகள் இப்படி ஒரு வாழ்வியற் சூழலில் இந்த நாடகம் நிகழ்த்தப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து நீண்ட காலத்திற்கு முன்னர் வந்த கடிதங்களை திரும்ப திரும்ப பார்ப்பது

குமணகப்பலும், குமாரிக்கப்பலும் எப்பொழுதான் வடகரையேறும் எங்கள் வீதிகளில், வீட்டு வாசலில், எப்பொழுதான். தபால் காரனின் தலை தெரியும் என்கின்ற ஏக்கம்.

நீண்ட நாட்களுக்கு முன்னர் கொழும்பு சென்று வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகளுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்ட நினைவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு கேட்ட அதே குரல்கள் இன்னமும் காதுகளை நிறைத்து நிற்கின்ற மனப் பிரமை

இப்படி இந்த மன வெளி வாழ்க்கை இந்த சமூகத்தை எவ்வளவு தூரம் பல வீனப்படுத்தி ஊன முள்ளதாக்கி விடும். இதுவே படைப்பாளியினது மன ஆதங்கம். இந்த நாடகத்தில் விரவியுள்ள கிண்டல் பேச்சுக்களும், நொள்ளைகளும்.

இப்ப கொழும்பிலை போய் சாகிறது தான் பெறற் (BETTER) - பிள்ளை கள் செத்த வீட்டிற்கு வந்து போக சுகம்.

இப்ப என்ன அவசரம், எம்பாம் பண்ணுகிறவன் வந்து எடுக்கிறதை எடுத்துக் கொண்டு விடட்டும் பிறகு கொளுத்துவம்.

ஒரு வகையில் மனக் கசப்பை ஏற்படுத்தினாலும். படைப்பாளியினது விரிந்த சமூக நோக்கிலிருந்து விடுபட முடியாதவை, வெளிப்படுத்தப்பட வேண்டியவையே' இங்கே குத்திக்காட்டப்படுகின்றன.

பலவீனங்களை கிண்டல் செய்வதோடு நின்று விடவில்லையென்பதும் இங்கே கவனத்துக்குரியது.

தலையிடியுந் தடிமனுந் தனக்கு தனக்கு வந்தால் தான் தெரியும் - என்கின்ற உரையாடல்.

அயலுக்குள்ளே காணப்படும் அந்நியோந்நியம்

கோவிலுக்குப் போகாதவர், வெளி நாட்டிலிருக்கும் பிள்ளையின் பெயரில் கோயில்களில் அர்ச்சனை செய்து தரும்படி அயலவர் கேட்டதும், கோயிலுக்குப் போய் வருகின்ற மனப் பாங்கு.

அயலவர் பெரியய்யாவின் மறைவைத் தாங்க மாட்டாமல் உருகி அழுகின்ற சோகம்.

இவையெல்லாம் மனிதத்தை, மனித நேயத்தை உயர்த்திவைக்கின்றன.

உள்ளத்தின் நுணுக்கமான உணர்வுகளை வெளிக் கொண்டு வருவதற்காகவே படைப்பாளர் பெரியய்யா பாத்திரத்தை படைத்துள்ளார். இந்தப் பாத்திரத்தை ஏற்று நடிப்பவரும் இதனை நன்குணர்ந்துள்ளார். நன்கு நெறிப்படுத்தப்பட்டுமுள்ளார்,

தள்ளாத வயதில் தனிமையில் தனது சாவை எதிர் நோக்கியிருக்கும் ஒரு மனிதனின் உள்ளுணர்வை உயிரோட்டத்தோடு முகத்தில் அழுத்தமாக வெளிப்படுத்திவிடுகிறார். இறுதி நேரத்தில் பிள்ளைகளின் செய்திகளெதனையுமே; அறியாமல் தனது உயிர் பிரியவுள்ள ஏக்கத்தினை, புத்திர சோகத்தை வெளிப்படுத்தும் விதம் மனதை நெகிழவைத்துவிடுகிறது.

உள்ளக் கொந்தளிப்பை அவை விளைவிக்கும் சோகங்களை வெளிப்படுத்தி தனது முகத்தில் நுண்ணிய நாடகத்தையே நிகழ்த்திவிடுகிறார்.

பெரியய்யாவின் முகத்தில் நிகழும்இந்த உயிர்த்துடிப்புக்களை, இந்த வெளிப்பாடுகள் விளைவிக்கும் முழுச்சுகங்களையும் மிக நெருக்கமாக இருந்து அநுபவித்தோம். இது ஒரு அசாதாரண அனுபவமே, மேடை நாடங்களிலோ அல்லது வேறு எந்தக் கலை வெளிப்பாட்டுச் சாதனங்களிலோ கிட்டாத ஒன்று.

இதுவே இந்த வாழ்வியற் சூழல் அரங்கு, இந்த நாடக வீடு! ஈட்டியுள்ள சாதனை.

இந்த நாடகத்தில் வருகின்ற ஐயாத்துரை பாத்திரத்தை ஏற்று நடிப்பவர் பல தரப்பட் கோணங்களில் நடிக்க வேண்டியவராகின்றார். பாசமுள்ள தந்தையாக. அந்நியோந்நிய மிக்க அயலவராக, பெரியய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவின் தோழராக, உரைஞராக, ஒரு கிண்டல் காரராக இப்படி பல பாத்திரங்களாகின்றார். இவரது நடிப்பில் முதிர்ச்சி காணப்பட்டாலும் சில இடங்களில் தன்னுணர்வை இழந்து விடுகிறார். இந்தப் பாத்திரம் காத்திர மயப்படுத்தப்படல் வேண்டும்.

இந்த நாடகத்தில் ''எந்தையுந் தாயும் மகிழ்ந்து'' என்னும் பாரதி பாடல் எடுத்தாளப்படுகிறது. இந்தப் பாடலுடனேயே நாடகம் ஆரம்பமாகி இறுதியிலும் இந்தப்பாடலுடனேயே நாடகம் நிறைவுறுகிறது. இந்தப்பாடல் படைப்புடன் கருத்தொருமை கொண்டிருப்பினும், எடுத்தாளப்படும் இடங்களைப் பொறுத்த மட்டில் சம்பவ ஒருமை அற்றதாக அமைகிறது.

ஆரம்பத்தில் கடவுள் வழிபாட்டின் போது பாடப்படுவது பொருத்தப்பாடற்றதாகவுள்ளது. இறுதியிலும், ஏதோ இதுவரை வெளிப்படுத்தத் தவறிவிட்ட விடயம் ஒன்றை சடுதியாக வெளிப்படுத்துவது போல, பெரியய்யாவிற்கு விருப்பமான பாடல் என்ற கூற்று, பெரியய்யா ஒரு புதுமை விரும்பி என்பது ஒரு செய்தியாகவே இங்கே வெளிப்படுத்தப்படுகிறது

படைப்பாளரின் கற்பனைப் புனைவில் கருத்தாழம் மிகுந்து காணப்படுகின்றது. இந்தப்பாடலை இணைத்துத்தான் படைப்பிற்கு வலுவூட்டவேண்டுமென்றில்லை. நயஞ்சேர்க்க வேண்டுமென்றுமில்லை. இதற்குமப்பால், நாடகத்தின் தலைப்பிற்கு இந்தப் பாட்டில் பொருள் தேட வைத்து தனது படைப்பை பலவீனப்படுத்தி விடுகிறார்.

இரண்டு இடங்களிலும், ஆரம்பத்தில் இன்பரசந் ததும்ப பாடும்பொழுதும், இறுதியில் சோகரசந் ததும்பப் பாடும் பொழுதும் பாடலைப் பாடுகின்ற நடிகரின் பாவவியல் இந்த விரிசலை மறைத்து நிற்கிறது.

படைப்பைப் பொறுத்த மட்டில் நிலையான கவனத்தை ஈர்க்கும் பாத்திரமாக பெரியய்யா பாத்திரம் வார்க்கப்பட்டுள்ளது. ஏனைய கவன ஈர்ப்புக்குரிய பாத்திரங்களினது நடிப்பிலும் பெரும்பகுதி அவரைச்சூழ்ந்த மையத்திற்குள்ளேயேஅமைந்து விடுகிறது. குறிப்பிட்ட அந்தமையமே பார்வையாளரினது கவனக்குவிப்பை நிலையாக ஈர்க்குமிடமாக அமைந்து விடுகிறது.

நாடகமேடையின் நடிப்பிடப் பிரிவுகள் போன்று, நாற்சார் முற்றத்திலும் மேல் மத்தி, வலதுமத்தி இடதுமத்தி, நடுமத்தி ஆகிய இடங்களே நடிகர்களின் நிலையான நடிப்பிடங்களாக அமைகின்றன. இவை நாடகமேடைக்குரிய தோற்றத்தையும் பிரமையையும் ஏற்படுத்தி விடுகின்றன.

மேடை நாடகத்திற்கு என்றே படைக்கப்பட்டு அதற்கொத்த பாத்திர வார்ப்பினையுங் கொண்ட இப்படைப்பு இப்புதிய வகை அரங்கில் நிகழ்த்தப்படும் பொழுது மேடைநாடகத்திற்குரிய பண்புகள் வெளிக்கிளம்புவது தவிர்க்கவியலாத தொன்றாகி விடுகிறது.

நாடகங்கள் எவ்வளவு தூரம் வீணே வெறும் இரசனைக் கோட்பாடுகளுக்குள் முடங்கிக்கிடக்கின்றன. என்பதை இத்தகைய புதிய முயற்சிகள் எம்முள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் மூலம் உணரக் கூடியதாகவுள்ளது துன்பியல் நாடகம் என்றால் அது எவ்வளவு தூரம் பார்ப்போரின் உணர்ச்சியைத்தூண்டி கண்ணீர் சொரிய வைத்துள்ளது. இன்பியல் நாடகம் என்றால் அது எவ்வளவுக்கு கிளு கிளுப்பையும் கலகலப்பையும் ஏற்படுத்துகின்றது. இப்படி மனித அநுபவங்களை கூறுபோட்டு கணக்கிட்டு நாடகத்தின் தரத்தை அளவிட முற்படுவது எத்தகைய அறியாமை என்பதையும் நாம் உணரக் கூடியதாகவுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமென்னும் பொழுது, இங்கே மனிதச்செயல்களும், செயல் நிகழ்வுகளுமே நிகழ்த்திக்காட்டப்படுகின்றன. நடிப்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கிமிடையே ஏற்படும் உயிருள்ள தொடர்புகள் நிகழ்விடத்தையும் உயிருள்ளதாக்குகின்றது இங்கே உணர்ச்சி, அழுகை, சிரிப்பு இத்தகைய மனித அநுபவங்கள் தவிர்க்க இயலாதவை.

ஐயாத்துரையின் கிண்டல்களையும், கொள்கைகளையுங் கேட்டு நாங்களும் சிரிக்கிறோம். பெரியய்யாவின் அவஸ்தைகளைக் கண்டு நாங்கள் உணர்ச்சி கொள்கிறோம். பெரியய்யாவின் மறைவைத் தாங்கமாட்டாத சோகத்தில் உருகி அழும் பொழுது நாங்களும் அழுகிறோம்.

ஆனால் இங்கே நாங்கள் நடிக்கிறோம். என்பதை நடிகர்கள் உணர்ந்து கொள்வதில் குறியாக இருப்பதோடு, பார்வையாளர்களாகிய நீங்கள் ஒரு நாடகத்தைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை எங்களுக்கு உணர்த்துவதிலும், எங்களைப் புற நிலைப்படுத்தி நோக்க வைப்பதிலும் அவர்கள் குறியாகத்தான் இருக்கிறார்கள்.

இந்த நாடகம் அரங்கத்தின் சாரதையும் அநுபவரீதியாக எங்களுக்கு அறிவைத் தருகின்றது.

இவைகள்தான் படைப்பாக்க மதிப்பீடுகளைத்தர முயர்ச்சித்தருகின்றன. ●●●

இணையும் ஈடும் இல்லாத
இந்தப் போரில் நீங்களெல்லாம்......
பணயம் வைத்தே உம்முயிரை
பலியாய்க் கொடுத்தீர் தியாகிகளே!

வெற்றி பெறுமோர் இலட்சியமாம்
விடுதலைக்காக நீங்களெல்லாம்...
உற்ற செல்வம் அனைத்தோடும்!
உயிரும் கொடுத்தீர்! கொடுத்தீரே!

முடிவில் ஒருநாள் கொடுங்கோன்மை
மூட்டோ டற்றுப் போகுமடா!
அடிமை மக்கள் விழித்தெழுவர்
அந்நாள், அந்நாள், அந்நாளே!

மக்ஸிம் கார்க்கியின்
'தாய்' நாவலில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் பூக்கும் மலரின் மணம்

உலகநாடன்

பூ பூவா பூத்திருக்கும் ஆயிரம் பூ பூமியிலே
புன்னகையும் ஒரு பூவே பூவையரின் முகத்தினிலே
தண்ணொளியாய் தாவரங்கள் தாவி மலர் பரப்பும்,
தாமரையும் தண்ணீரில் தான் நனைந்து பூ முளைக்கும்

இங்கே இவன் கூறும் இந்தப்பூ?
மணம் வீசும் மண் பூவாம் மாய்கின்றேன்; மண்டைதனை பிய்க்கின்றேன்
தேடுகிறேன் ஓடுகின்றேன் இருள்சூழும் அந்தியிலும்
உதயத்தின் அரும்பதிலும், வெள்ளி பூத்ததொரு நேரத்திலும்,
எனக்கெதுவும் புரியவில்லை.
மண் பூக்கும் மலரின் மணம் தெரியா என் மூக்கின் மூச்சிரைக்கும் முனகலினால்
மூச்செடுக்க சற்று அமர்கின்றேன்

செல்லரித்த வீடொன்றில் செருமல் ஒலியுடன்
சொல்லொன்று செவியில் தேனாகத் தெவிட்டியது
மண்பூக்கள் முன்று மன்னாரில் மலர்ந்ததுவே.
நாண் அறுந்த வில்லுப்போல், கூன் நிமிர்ந்த கிழவர் குதறிய வார்த்தையிது
வில்லில் அம்பு போல் விரைந்தருகில் சென்று
சொல்ல வேண்டும் சொல்லரிய வார்த்தையிது.
மண் பூக்கும் மலர் எந்தனுக்கு புரியவில்லை மடையன் நான்
மலங்க விழியுயர்த்தி மதிப்புடனே முகம் பார்த்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுக்காய் மகனையீந்த மாமனிதக் கிழவரிவர்
குவிந்திருந்த மலரொன்று மலர்ந்ததுபோல் வாய்திறந்து
சுயத்தை கொன்றிடுவாய் சொந்தத்தை மறந்திடுவரய்
இதயத்தை மண்ணுக்காய் இரங்கி நீ விட்டிட்டால்
மறவீரன் உரு எடுப்பாய் மலர் வனமும் சென்றடைவாய்.
மாவீரன் ஆவதற்கு மனம் கொஞ்சம் இடருமென்றால்,
சிறந்த அக் காட்சி தனை மறந்திடுவாய் என்றுரைத்து.
ஆனாலும்,
இவ்வூரின் மத்தியிலே இருக்கின்ற இல்லமொன்று, பவ்வியமாய் பாதுகாக்கும்
பாசமலர் பல நூறு

மண் பூக்கள் மலர்ந்தவுடன் மதிப்பாக எடுத்து வந்து
மலர் அடுக்கி வைத்திருக்கும் மாண்புதனைப் பாரிங்கே,
அப்பாலும் கூறுகின்றேன்...... தப்பாமல் கேட்டிடுவாய்,
நவம்பர் மாதமதில்நல்லதோர்செய்தி சொல்லும் தேதியோ இருபத்தியேழு.
சுகந்தமிங்கே வீசுமப்பா, சுடரொளியோ கண் பறிக்கும்.
அகமெல்லாம் ஒளிபரவும்.

இன்னும் சொல்வேன் இருள் விலக கேட்டிடுவாய்......
மண் பூக்கள் மலருமந்த நேரத்தில்
மண் சிவக்கும், மரம் சிவக்கும், கொடி சிவக்கும், பூ சிவக்கும், மழலைகள்,
- முகம் சிவக்கும்

உதயத்தின் அறிகுறியாய், வான் சிவக்கும்.
மண்ணுக்காய் மண்ணில் மரணித்த மாவீரன் போல் மண் பூக்கும்.
புதிதாய் மலருகின்ற புதுமை மிகு மலர் கண்டேன்; விடியலுக்காய்
விழுகின்ற வீர மிகு மலர் கண்டேன்.
மண்ணுக்காய் மணம் பரப்பும் மாவீரன் மலர் கண்டேன்.

என்னதான் செய்தேனோ மண்ணுக்காய்
எதுவுமே செய்யவில்லை ஏக்கமுடன் எழுகின்றேன்: நடக்கின்றேன்.
ஏறி நின்ற உணர்வுதனை இறக்கிவிட மனமுமில்லை.
மண் பூக்கும்; பூவின் மாண்புதனை கேட்டு, மனம் மாறி செல்கின்றேன்.

□□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வீரப்புலியை ஈன்ற அன்னை

''பாப்பாப்பா''

தமிழ்ஈழ நாட்டின் விடுதலைக்காகப் போராடிய 'விடுதலைப்புலிகள்' எனும் இளம் தமிழ் வீரர்களை அடக்கி ஒடுக்கவென சிங்கள அரசு அனுப்பிய ஆயுதப் படைப் பிரிவு ஒன்று சாவகச்சேரியை அடுத்த நாவற்குழியூரில் முகாமிட்டிருந்தது. அப்படையினர் வெளியே சென்று பொதுமக்களுக்கு கொடுமைகள் புரிவதைத் தடுத்து, அந்த முகாமைச் சுற்றி காப்பரண்கள் அமைத்து இரவுபகலாக காவல் புரிந்தனர் புலிவீரர்கள். முகாம் அமைந்த சிறு நிலப்பரப்பை விட்டு வெளியே வந்து நடமாட முடியாத நிலையில்' அப்படைகளின் உணவு தண்ணீர் முதலான அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் ஹெலிகொப்டர் மூலம் வானிலிருந்து வீசப்படும். முகாம் பகுதிக்கு மேலாக தாழப் பறந்து வரும் 'ஹெலி' கள் தமிழ் வீரரின் படைக்கலன்கள்'லிருந்து பாயும் குண்டுச் சத்தம் கேட்டு மேலெழுந்து உயரத்தே பறந்து வட்டமிட்டு பொதிகளைப் போட்டுவிட்டுப் போகும். பொதிகள் எல்லாமே முகாமுக்குள் விழுவதில்லை. ஏமாற்றமும் சினமும் அடையும் படையினர் வெளியேறி நகர்ந்து தமிழ் மறவரின் காவலரண்களை நோக்கிச் சுடுவர். இரு படைகளுக்குமிடையே துப்பாக்கிச் சண்டை நடைபெறும்; இழப்புக்களுடன் சிங்களப் படை திரும்பி முகாமுக்கு செல்லும்.

இந்நிலையில் ஒரு நாள் காலை வானில் இரண்டு ஹெலி' கள் விரைந்து வந்து வட்டமிட்டுப் பொதுமக்களை நோக்கிச் சுட்டன. வானிலிருந்து சிதறிய குண்டுகளை பார்த்து ஓடி ஒளிந்துகொண்ட மக்கள் மேலும் என்ன நடக்குமோ என அஞ்சினர்.

அன்று மாலைப் பொழுதில் ஒரு செய்தி பரவிற்று.

''இன்றிரவு எல்லா 'பொம்பர்களும் ஹெலி' களும் சேர்ந்து தென்மராட்சிப் பகுதியில் குண்டு பொழியும் என்ற வதந்தியை உண்மையென நம்பிய மக்கள் இரவிரவாக காப்பகழிகளை வெட்டத் தொடங்கினர்,

அவ்வேளை ஒரு தாய் எதையோ சிந்தித்தபடி தன் வீட்டு வாயிலில் நின்றாள்.

அவளைப் பார்த்தஎதிர்வீட்டு பெண் 'ஏன் நீங்கள் பதுங்குகுழி வெட்டவில்லையா ? '' என்று கேட்டாள்.


''என் பிள்ளை அங்கே நாவற்குழியில் பொம்பரையும் ஹெலி' யையும் எதிர்த்து நிற்கிறான். எனக்கெதற்கு பாதுகாப்பும் பதுங்குகுழியும். என் உயிர் மட்டும் என்ன வெல்லமே ... ... ? எனப் பதிலளித்தாள் அத் தாய்.

அதனைச் செவியுற்ற தமிழ்ஈழப் புதுக் கவிஞர் ஒருவர் பாடிய புதிய புறம்' வருமாறு;

'' பதுங்ககழீ அமைக்க
விலேயோ என
ஆங்கோர் பெண்ணை
வினவினள் அயலவள்
என் மகன் அங்கே
பொம்மரைக் ஹெலியை
விழுத்தக் களத்தில்
நிற்கையில்
என் உயிர் என்ன
வெல்லமோ என்றாள்
ஒரு வீரப்புலியை
ஈன்ற அவ்வன்னை □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகர்வு



## 1

இருளும் அச்சமும் கொண்ட நீண்ட இரவுப்பொழுது, அந்தி வேளை உதயத்தின் போதே ஊரை உறக்கத்திலாழ்த்தும் இடையிடை வெடிக்கும் துப்பாக்கி ஓசைகள். அவர்களை அடிக்கடி மூத்திரத்திற்கு எழுப்பி விடும், ஆர். பி. ஜிக்கள். தொலை தூரத்தில் வெடித்துக் சிதறும் பக்கத்துக் கல் வீடுகள்...... பங்களாக்களில்... மாடிக் கட்டிடங்களில்...... நள்ளிரவில் எழும் சந்தடிகளும்... சரசரப்புகளும்......... அச்ச வெடிகளும்......... ''எங்க இருக்கு?......எங்க ஒழிச்சுப் புதைச்சுவைச்சிருக்கியள் .... சொல்ல மாட்டியா... உன்ர சின்ன மகன்ர சின்னிவிரலை வெட்டி எடுத்தாத்தான் சொல்லுவியா?...... எங்களிட்ட ஒண்டுமில்லை எண்டு நீ சொன்னாப் போல நாங்கள் ஒண்டும் பேயர் மடையரல்ல...... நம்புறதுக்கு..... நீங்கள் ஆரு?...... உங்கட வைப்புச் சொப்பு என்ன?... எல்லாத்தையும் அறிஞ்சு கொண்டுதான் வந்திருக்கிறம்...... டேய்...... அந்தப் பெட்டையைப் பிடிச்சுக் கொண்டு வாடா...... அப்பதான் இவருக்கு எங்களைப் புரிய வரும்''

''ஐயோ......... வேண்டாம். வேண்டாம்...... ... என்ர சொத்துப் பத்தெல்லாத்தையும் கொண்டு போங்கடா...... என்ர குஞ்சுகளை ஒண்டும் செய்து போடாதேங்களடா''

''ஏய் வாய் பொத்தோணும் ..... சத்தம் போட்டா பொடியள் வருவாங்கள் எண்டு நினைப்போ... இப்ப வந்து பாக்க வேணும் ...... வரச்சொல்லுங்கடி பாப்பம்...... தெருமுழுக்க இந்தியன் ஆமி நிக்குது எங்களுக்குத் காவலா...... கூப்பிடுங்கடி அவன்களை'' ...... என்று எழும் குரல்களும்...... சப்பாத்துச் சரசரப்புகளும்......... தெரு நாய்களின் குரைப் பொலிகளும் எல்லாவற்றையும் உணர வைக்க, இருளில் கூட மூச்செழா வண்ணம் முடங்கிக்கிடப்பர்.

தெரு நாய்கள் கூட நன்றாக இனம் கண்டு கொண்டன. வருவது இந்தியன் ஆமியா...... துரோகக் கும்பலா...... பொடியளா என்று... நாய்களின் குரைப் பொலி வித்தியாசத்திலிருந்தே மக்களும் இனம் பிரிக்கவும்... வெடிபோசைகளிலிருந்து இது பொடியளின்ர...... இது ஆமியின்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



☐ செம்பியன் செல்வன்

என்று வேறுபடுத்தவும் ..... வானத்தில் எழும் சப்தங்களிலிருந்து பொம்மரா...... அவ்ரோவா...... சீப்பிளேனா......? என்று குழந்தைகள் கூட பந்தயம் கட்டுவதை ஒரு போர்க்கால விளையாட்டாகவே மாற்றிக்கொண்ட அவர்கள்.....

எதெற்கும் விடியட்டும்... செய்தி தெரிய வரும் என்று நித்திரையில்லாமல் படுக்கையில் புரளும் ஆண்களை ..... என்னப்பா....... என்று மெல்லக்குசுகுசுக்கும் மனைவிமார்களை, அதை தெரியப் படுத்தவிரும்பாமலோ...வெறும் ஊகங்களைச் சொல்லி இதுகளை ஏன் கலவரப் படுத்துவான் என்ற நினைப்பில்..... ஒண்டு மில்லையப்பா நீரேன் வீணாக கவலைப்படுறீர்?.... பேசாம நித்திரையைக் கொள்ளும்... அவங்கள் எங்கையேயோ கடலுக்க அடிக்கிறாங்கள் போல......என்று சொல்லப் போக, ...என்னப்பா...... பொடியள் ஏதும் ஆயுதங்கள் வண்டியில கொண்டு வந்து இருப்பாங்களோ..... ... அதைக்கண்டிட்டுத்தான் ஆமிக்காரன்கள் அடிக்கிறான்களோ...என்று கவலையில் விசாரணைவிரிய...... உந்த விசர் எண்ணங்கள் தானே உங்களுக்கு வரும்... பொடியளைப்பத்தி இவ்வளவுக்குப் புறகும் என்ன நினைக்கிறியள்?......பொடியளின்ர வீரத்தில.... புத்தியில கால்தூசி பெறுவாங்களே.. இவங்கள்... என்று பேச்சிலேயே மிகுதிப் பொழுதையும் கழித்து வெளியே வருவார்கள்.

அவர்களுக்கு இந்த நித்திய வாழ்க்கை வழக்கமான பழக்கமாகிவிட்டது .....

அன்று விடிகாலையில் எழுந்த 'சடசட...சடசட பட்...பட் வேட்டுச்சத்தங்கள் கிராமத்தையே ஒரு உலுப்பு உலுப்பிவிட்டது

ஊருக்குள் ஏதோஅனர்த்தம் நடந்து விட்டது.

எங்கே?...... எங்கே?....

'கோயில் குருக்களின்ர மகனை...... சின்னஐயரை இந்தியன் ஆமி சுட்டுப் போட்டாங்களாம் 'பொடி' கோயிலுக்குள்ளயாம்........ ஏன் சுட்டவங்களெண்டு தெரியாது...... காலைப் பூசைக்குப் போனவையும் உள்ளயாம்..... ஒருவரையும் வெளிய விடுறாங்களில்லையாம்.....

செய்தியை காற்றிலே பறக்க விட்டவர்கள் யார்?

கிராமமே கோயிலை நோக்கி ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

சடலத்தை வாங்க நீண்ட நேரம் போராட வேண்டியதாயிற்று. கோயிலுக்கு வெளியே கிராமமே திரண்டிருந்தது. சின்ன ஐயரை ஏன் சுட்டீர்கள்... என்ற மக்களின் கேள்விக்குப் பதிலில்லை... இந்தியா இன்னொருமுறை தனது அஹிம்மையில் சேற்றை அள்ளிப் பூசிக் கொண்டது'

'சின்னஐயரை எங்களிடம் தாருங்கள்...... அவர் எங்கட கிராமத்தின் சொத்து...... அவரின் கொலைக்கு யார் காரணம்?'... மக்களின் கொதிப்பிற்கு அவர்கள் இறங்கி வரவேண்டியதாயிற்று.

'பிரேதத்தைத்தரலாம் ஆனால் நீண்ட நேரம் வைத்திருக்கக்கூடாது. இரண்டுமணிக்குள் அடக்கம் செய்து விட வேணும்...... ஊர்வலத்தில் ஐம்பதுபேருக்குமேல் கூடாது...நாங்க அடிக்கடி வந்துபாப்பம்''...

இந்திய ஆமி வெளியேறியது.

உள்ளே அகப்பட்டிருந்த அடியார் கூட்டம் திகைத்துச் சூழ்ந்து நிற்க வித்தியா வியாகரண சித்தாந்த சிரோண்மணி சாம்பசிவக் குருக்கள் தனது ஐம்பதாவது வயதிலும் தளராத உடல் நிலைகுலைய கர்ப்பக்கிருகப் படிக்கட்டில் உறைந்து போயிருக்க அவர் காலடியில் சின்ன ஐயர் நெஞ்சில் குண்டு பாய்ந்த அடையாளக் குருதியில் கிடக்க......

உள்ளே நுழைந்த கூட்டத்திலிருந்த நாலைந்து இளைஞர்கள் பரபரப்பாக கடமையாற்றத் தொடங்கினர். யார் என்ன செய்கிறார்கள்...... எதைச்செய்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்வதற்கிடையில் சின்னஐயரின் சடலம் வீடு போய்ச் சேர்ந்து விட்டது.

வீடு சிறிது நேரத்தில் அழுகை ஒலியால் நிறையலாயிற்று ஊரும் உறவும் கூடியது. சாம்பசிவக்குருக்களின் பத்தினியார் மகனின் சடலத்தைப் பார்த்து மயங்கி விழுந்தவரின் மயக்கத்தைப் போக்க சில அம்மாக்கள் முயன்று கொண்டிருந்தனர் சின்னஐயரின் சகோதரிகள் சகோதரனின் முகம் பார்த்துக் கதறிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரேயொரு சகோதரன் ஆளும் நல்ல அழகன். சைவானுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பது மட்டுமல்லாமல், இருக்கு வேதம் கற்றுக் கொள்கிறான்...... வேதங்களில் மிகப் பெரியது... இதனைக்கற்றாலே யசுர், சாம, அதர்வங்களைக் கற்று விட்ட நிறைவு ஏற்படும்......சமூகத்தில்... சடங்குகளில்... நல்ல மதிப்பும் ஏற்படும்...... இவற்றுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல கல்லூரியில் ஏஎல் மருத்துவம் படிக்கிறான்... தோளிற்கு மேல் வளர்ந்த பிள்ளை. அதனால் அடிக்கடி தந்தைக்கும் மகனுக்குமிடையில் தர்க்கங்கள் நிகழ்வதை தாயும், சகோதரிகளும் பார்த்தும் கேட்டும் மகிழ்வர். அந்த சகோதரன் இன்று இப்படி...... வாய்பேசா மௌனியாக... நீண்ட துயிலில் சூழ்ந்திருக்கப் பொறாமல் இரு சகோதரிகளும் வாய் விட்டு அடிக்கடி அலறினர்.

சாம்பசிவக் குருக்களோ பார்வையை அவனது நெற்றிப் பொட்டினூடாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்......

''மகன் இப்ப எங்கட சமூக ஆசாரங்களெல்லாம் கெட்டுக் கொண்டு வருகிறது .. அவனவன் ஆசாரங்களைக் கைவிட்டு விட்டு கிராப் வைத்துக் கொண்டு அரசாங்க உத்தியோகத்துக்கும் வேறு மாதச் சம்பளத்துக்கும் போய் விடுறாங்கள்... பணம்... செல்வம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமா வாழ்க்கை...... பிழைப்பு .. நாங்கள் தெய் வத்தை தொட்டு வாழு றவங்கள்..., மக்கள் தங்கள் விக்கினங்களுக்கு கடவு ளைத் தேடி வருகினம்..... நாங்கள் தான் கடவுளுக் கும் அவர்களுக்கு மிடையே தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பவர்கள்... நாங்கள் எங்கள் குல தர்மத்தை... புனிதத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்''

''எல்லாம் சரிதான் அப்பா...... ஆசாரம் ...... ஆசாரம் என்று சொல்லிக் கொண்டு சில சமயம் மக் களை விட்டே வெகுதூரம் போய் விடுகிறோமோ என்று அச்சமாக இருக்கு...

''நாம் என்ன? அரசிய லில் தேர்தல் காலத்தில் வாக்குக் கேக்கும் அரசியல் வாதிகளா?... நாம் எட்ட எட்ட நிற்கத்தான் புனிதம் பெருகும்... தூய்மை சிறக் கும்...... மக்களுக்கும் எங் களில நம்பிக்கை பிறக்கும் ...ஏனெண்டா இது தெய்வ சங்கல்பம்......... தெய்வ சேவை...... அதோட...

அதோட என்னப்பா ......

ப்பிராஹ்மணோ ஸ்ய முகமாசித் பாஹுரன்ய: பிராமணர்கள் யஜ்ஜப் ரௌக்ஷகன் முகத்திலிருந்து வந்ததாக ஸூக்தம் சொல் கிறது......

அப்பா... உங்களிடம் வேதம் கற்றுக் கொள்கி றேன். உங்களிடம் பெற்ற பிரம்மோபதேசம் ... திரி கால சந்தியாவந்தனம்..... காயத்திரிமந்திரம் எல் லாமே எனது உடலுக்கு ஆத்மாவுக்கு இன்பமாக இருக்கிறது...... கல்லூரி யிலே கற்கும் கல்விக்கும் நிறையப்பயன் தருகிறது .. சமூகத்தில் உயர் நிலையி லிருந்த பிராமண சமூகம் இன்று என்ன நிலையில உள்ளது இந்தியாவில உயர் சமூகமெனக் கூறி தாழ் நிலைப்படுத்துகிறார்கள். ... அரசியல் மேடைகளில எங் களைச் சதுரங்கக் காய்க ளாக நகர்த்துகிறார்கள்... ஏன் எங்களைப் பலிக்கடாக் களாக்கி வருகிறார்கள்..... இது எங்கள் பொருளா தாரத்தை நிறையப்பாதிக் கிறது... ஏன் இன்றைக்கு பிராமண சமூகம் கோயிலை விட்டு வெளியே வேலை தேடுகிறது ........? பூசகர் வேலையில் போதிய வரு மான மின்மை...... மாறி வரும் விலை வாசிகளுக் கேற்ப சன்மானம் வழங்கு கிறார்களா?......... அதுவு மில்லை...... ஆனால் அந்த சொற்ப சன்மானத்தைக் கொடுக்கும் போதும் எவ் வளவு எள்ளல்கள்... கேலி கள்.

சாம்பசிவக் குருக்கள் மகனை உற்றுப்பார்த்தார். எவ்வளவு உண்மைகளை உணர்ந்து பேசுகிறான் தந்தைக்கு உபதேசித்த தகப்பன் சாமி போல...... அவர் நெஞ்சம் விம்மக் கேட்டார்.

''அதற்கு என்ன செய் வது?''

''ஒன்றும் செய்ய வேண் டாமா?... நாங்கள் வெறும் பூசகர் மட்டுமல்ல, தமிழர் களின் பண்பாடு..... கலா சாரம்... சடங்கு... சம்பிர தாயங்களை வழிவழியாகக் கட்டிக்காத்து மக்களுக்கு அளித்து வருபவர்கள்...... கோயில்கள் இவற்றின் களஞ்சியங்கள்...... இந்த உண்மையை மக்களுக்கு புலப்படுத்த வேண்டும்...... இதைத்தான் ஆதிசங்கரரும் இன்னொரு வழியில் செய் தார்

அவர் திடுக்கிட்டார்.

ஆதிசங்கரர்?

''ஆமாப்பா தான றிந்த பிரம்மோபதேசம் பிறருக்கு...... முக்கியமாக சூத்திரருக்கு தெரியக் கூடாது .... தெரிந்தால் தனக்கு நரகம் என்பதை நன்குணர்ந்தும் லோகாமோ க்ஷத்திற்காக ஊர் அறியப் பிரசங்கிக்கவில்லையா....... அதனால் இந்துமதம் வளர்ந் ததேயன்றிக் குன்றவில் லையே''

''நீயென்ன சொல்ல வரு கிறாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த உண்மையைப் புரிந்து கொண்ட மக்களுடன் நாம் இணைந்து கொள்வோமானால் எமது தனித்துவமும் வளரும்...... நாடும் நன்மை பெறும்...... அதற்காக நாம் போராட வேண்டிய காலம் வந்து விட்டது......

''சண்டையா? அது பிராமண தர்மல்லவே?''

''தர்மங்களை நிலை நாட்ட நடந்த போர்களில் பிராமணர்கள் பங்கு கொள்ளவில்லையா?

அவர் நெற்றி சுருங்கியது

என்ன சொல்கிறாய்?. பாரதப்போர் - நடந்தது எதற்காக?... நடத்தியவர் யார்?... குருக்களின் விழிகளில் நீர் பிரவாகமெடுத்தது மகனே!..மகனே!..

☐ ☐ ☐

ஏய்!... ஏய்!... இங்க நிண்டு இப்ப ஆர் ஓடினது உண்மையைச் சொல்லிப் போடவேணும்.

யார் யாரோ வேகமாக குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறார்கள்... சப்பாத்துக் கால்களின் ஒலி... தெய்வ சந்நிதானத்தையே கொலைக்களமாக்கிய பாதகர்கள்... தெய்வ சந்நிதானத்திலேயே தெய்வமாகி வந்து சயனம் கொள்ளும் இந்தப் புனித இடத்தைக் கூடவாக சற்று நேரம் தூய்மையாக இருக்க மனம் விடவில்லை யார் இந்த அசுரர்கள்......

எல்லா கைகளிலும் துப்பாக்கிச் சனியன்கள்...

உதவி செய்து கொண்டிருந்த இளவட்டங்கள் எல்லாரும் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டார்கள்... பெண்கள் விழிகளில் நீர் பயத்தால் உறைய... சில வயோதிபர்கள் திண்ணையில் இருந்தவாறு மௌனமாகப் பார்வையை விரித்தவாறு ..

இங்க ஆர் வந்தது?... நிண்ட பொடியள் எல்லாம் எங்கே?

யார் யாரையோ விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் இழவுவீட்டிற்கு வந்தாக்கள் .. இண்டைக்கு இண்டைக்கு என்ன இண்டைக்கு... இனி இந்த வீட்டிற்கு துக்கம் விசாரிக்க ஆக்கள் வந்துபோவினம்... செத்தது என்ன உங்களைப் போல சாதாரண மனுசனா...வேதவித்து...கிராமமே நம்பிக்கையோட காத்திருந்த உத்தம மனுசன்... கிராம மக்களின் கனவையே அழிச்சிட்டீங்களே... இங்க வந்து போறவையளை கணக்கெடுக்கவே வந்திருக்கிறம் போதாததற்கு நீங்கள் வேற சப்பாத்துக் காலோடு

ஏய் கிழடு என்ன கனக்கக் கதைக்கிறா?...துப்பாக்கியின் பின் பக்கத்தால் யாரோ அடிக்கும் ஓசை

ஐயோ... ஐயோ... முருகா...

செதியண்டு சவ அடக்கத்தை முடிக்க வேணும் .. ஆரும் பொடியள் .. இளம் பொடியள் இங்கநிக்கவேண்டுமெண்டால் எங்கட சம்மதம் எடுக்கவேணும்...

ஏன்?... ஏன்?...

அவர் கண்களில் எதுவோ காட்சியாக விழுகிறது...

உதயகால பூஜைக்காக அவரும் மகனும் வீட்டை விட்டு புறப்பட்ட போது எல்லாமே சரியாகத்தானிருந்தது. ஆள் அரவமற்ற வீதி... வெட்டவெளியில் உறங்கும் தோட்டங்கள் .. ஆட்களற்ற துலாக்கள்... வானோடு மௌன இரகஸ்யம் பேசும் பெரிய தோட்டக் கிணறுகள் .. காலைப் பனிதூறியிருந்த தார் வீதி பச்சைப் பசும் புல் நிலங்களுக்கு சமன்தான். வீதியின் வலது புறம் கழிவு வாய்க்கால் .. அதற்கப்பால் பரந்திருந்த தோட்டம்... தோட்டத்திற்கு அப்பால் புகையிரதவீதி... அதற்குமப்பால் வெறும் பற்றைகள்... பனைவடலிகள் புல்மேடுகள் .. வழக்கமான பார்வையில் மாற்றம் தெரிய வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37

தந்தையும் மகனுமாகக் கோயிலைத் திறந்து உள்ளே புகுந்து பூசைக்கான ஆயத் தங்களை மேற்கொண்ட னர். பெரியவர் கர்ப்பக்கிரு கம் புக சின்னவர் மடப் பள்ளியிலிருந்த சருவக் குட மும் கயிறுமாக தீர்த்தக் கிணற்றை நோக்கிச் சென்ற போது, அவர்கள் நுளைந் தாகள்.

ஐயா சத்தம் போ டாதேயுங்க...... நாங்க தான்...

இரண்டு இளைஞர்கள் அவசரமாக நுழைவதற் காக காலில் சிலிப்பருமில் லாமல். சாறம் சேட்டுடன் ஒருவன் கையில் உரப்பை யில் எதனையோ சுருட்டி வைத்திருக்கிறான் ...

அவருக்கு விளங்கி விடு றது.

தண்டவாளத்துக்கு அங்கால ஆமிக்காரன் விடி யவிடிய படுத்துக்கிடக்கி றான்...ஐயா நாங்க வந் ததைக் கண்டிட்டாங்கள் எண்டு தான் நினைக்கிறம் எப்படியும் அவங்கள் வாற துக்குள்ள நாங்க போயிடு வம்... நீங்க ஓடிப் போய் பூசைமணியை அடியுங்க...

பஞ்சாட்சரம் மணியை நோக்கி ஓட, அங்க என்ன கதை யாரோட கதைக் கிறா... என்றபடி சாம்பசி வக் குருக்கள் கர்ப்பக்கிரு கத்தை விட்டு வெளியே வந்தவர் திக்கித்துப் போகி றார்.

அவர்கள் வடமேற்குத் திசையாக வாகனசாலையி ருந்த இடமாக ஓடுகிறார் கள்.

வெளியேயிருந்து சிற் சில அடியார்கள் கோயிலு க்குள் நுழைந்து சிலமணித் துளிகளில் இந்திய ஆமி 'படபட' வென உள் ளே புகுகின்றது. கோயிலின் உள் வீதியெங்கும் சப்பாத் துக்கால்களுடன் ஓடுகின் றனர். புல்வெளிகளில் தட் டாம் பூச்சியைத் துரத்தி வெறும் கையுடன் திரும்பும் சிறுவர்கள் போல...

ஏய்... ஐயர்... இங்க வா... இரண்டு பேர் வந் தாங்கள் எங்க...

எந்த ரெண்டுபேர்?

சாறனோட வந்தாங் கள்...

நான் கர்ப்பக்கிரகத்தி ற்குள் நிண்டனான் கவனி க்கேல...

ஏய்...பூஜாரி பொய் சொல்லுறா இல்லை நீயும் அவங்கட ஆளா... நீ நிசம் சொல்லாட்டா உங்களை எல்லாம் சுடுறது ... வா... எல்லாரும் வரிசையா நில் லுங்க...ஆ......ஒண்ணு...... ரெண்டு

வெடிச்சத்தம் வானைப் பிளக்கிறது...

பஞ்சாட்சரம்... கற்பக்கி ருக வாசலில்...

இந்த வெடிச்சத்தம் எதனையோ வெளியில் நின் றவர்களுக்கு உணர்த்தியி ருக்கவேண்டும்.

தண்டவாளத்திற்கு அப்பால் பல வெடிச்சத்தம் கேட்க ஆமி நகர்கிறது...

ஐயோ... மகனே...! பஞ்சாட்சரம்... அவரது இதயம் ஓலமிட்டு அழுகி றது...

## 3

இந்திய இரரணுவம் நுழைந்தபோது தமிழர் களுக்கு ஏதாவது இவர் களால் நன்மை கிடைக்க லாம் என அறியாமை வசத் தில் நம்பியவர் இந்தியா என்றால் தமிழகம்...தமிழ கம் என்றால் எமது தாய் நாடு என்ற மனப்பான் மையில் வளர்த் தெடுக்கப் பட்ட பரம்பரை வேறெப் படி சிந்திக்கும்? அதிலும் சாம்பசிவக்குருக்கள்போன் றோருக்கு?

இந்தியா வேதங்களின் விளைநிலம் அங்கிருந்து வரும் படை நிச்சயம் நல் லதே செய்யும்.

''அப்பா படை எண் டால் படைதான்... அதில் சைவப்படை... அசைவப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படை என்ற வித்தியாசமில்லையப்பா

பரமசிவம் வாய்க்கு வந்தபடி பேசாத உனக்கென்ன தெரியும் இந்தியா பற்றி.. எங்கும் நதிக் கரைகள்... புண்ணியதலங்கள்... கன்னியாகுமரியிலிருந்து இமயமலை வரை புண்ணிய க்ஷேத்திரங்கள்... அந்தப் புண்ணிய பூமியிலிருந்து வருபவர்கள வேறு யாருமல்ல... எங்கட சாதி சனம் நீ ஒரு கண்டறியாத கல்லூரி ஒண்டிலை படிக்கப் போய்த்தான் இப்படியெல்லாம் பேசிறா... பாரன் என்ன நடக்கப் போகுது எண்டு...

அவர் எதிர்பாராதது நடந்தது.

மக்கள் அனைவரும் உடனடியாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி அருகிலுள்ள கோயில் பாடசாலைகளில் போய் இருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்...

அவர் மனதில் ஏதோ ஒன்று நகர்வதுபோல் பட்டது. குடும்பத்துடன் நல்லூரை நோக்கி நடந்த பொழுதுதான் அவருக்கு அரசியல் அறிவு ஏன் அவசியம் என்று புலப்படலாயிற்று. மனைவியோ... .. வீடு வாசல் எப்படியிருக்குமோ..... பண்டம் பாத்திரம் பறிபோகாமல் இருக்குமோ என்று கவலைப்பட்டதற்கு...... வந்தவங்கள் என்ன கொள்ளைக்காரன்களோ நீ ஒண்டுக்கும் பயப்படாத அதோட கோயில் குருக்கள் வீட்டில கை வைக்கிற அளவுக்கு மோசமாக இருக்க மாட்டாங்கள்... என்று தேற்றியவர் ஒரு வாரத்தின் பின் வீட்டிற்குச் சென்றவர் அதனைத் திறக்க வேண்டியிருக்கவில்லை வீடு சூறையாடப்பட்டிருந்தது. கோயிலை நோக்கி ஓடினார்.....

கோயிலின் உட்பிரகாரங்களில், மடப்பள்ளிப் பாத்திரங்கள் மாமிசக்கறி எச்சங்களுடன்......

ஐயோ... முருகா... என்றலறலுடன் அவரின் இன்னொரு நிலையில் எதுவோ தகர்ந்தது.

''வேத வித்துக்களின் விளைநிலங்களில் அரக்கர் முளைத்தெழுந்தது எப்படி?......''

கோயிலில்..... மடப்பள்ளிப்பாத்திரங்களில்...... மாமிசக்கறி...... பொறுப்பதிகாரியின் சட்டையில் ஏதோ சர்மாஜி எனப் பெயர் பொறித்திருந்ததாக ஞாபகம்.....

அவர் இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிறார்........

கோயிலை எப்படி புனிதப்படுத்துவது......?

யார் வீட்டில......? அவர் எட்டிப்பார்க்கிறார். வெளியே இந்திய ஆமி

என்ன?

இந்த வளவு வேலியை வெட்டிப்போட வேணும்... நாளைக்கு நாங்க வரேக்க வெட்டாமலிருந்தா எரித்துப் போடுவோம்.

ஏன்?.....

அதென்ன கேள்வி..... சொன்னதை செய்யும் ஐயர் சரியா......

அதெப்படி இந்த வளவுக்கு மேற்கால பிரதான வீதி... தெற்கால சின்ன வீதி..... வேலியை வெட்டிவிட்டா...... நடுச்சந்தியில தான் என்ர வீடு ... இது பிராமண வீடு, ... அப்படி இருக்க முடியாது .....

ஏய் ஐயர்...... அதிகம் பேசாத..... சொன்னதை செய்......

அவர் அடுத்த நாள் பூசை முடிந்து வரும் பொழுது அவரது வேலி எரிந்து கொண்டிருந்தது... இந்தியன் ஆமி தனக்குப் பாதுகாப்புத் தேடிக் கொண்டது....

அவரது நெஞ்சம் எரிந்து கொண்டிருந்தது. இப்படைகளுக்கு இப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

யெல்லாம் ஆணையிட்டுக் கொண்டிருக்கும் அந்தப் பெரியவன் யார்? நல்லாயிருப்பானா?...... அவனும் இப்படியே?......வரம் கொடுக்கும் வாய் சபிக்கிறதா?

ஏய்... ஐயர்... நீ என்ன பொடியள் கட்சியா?........

என்ன பேசாம இருக்கிறாய் அந்த வேலியை நீ ஏன் வெட்டிப்போடேல்ல .. எதை...?

அதிர்ந்து போகிறார்.

கிணற்றடிக்கு மறைவாகப் போட்டிருக்கிறதையா? ... அதை வெட்டி விட்டா பெண் புரசுகள் எப்படி மானம் மறைப்பாக நின்று குளிக்குங்கள்? .....

ஏன் பொடியள் மறைவா நிண்டு எங்களுக்கு குண்டு சுடவா......

சொன்னதை செய்... படைக்குப் பாதுகாப்புத் தேவை?......

அவரது குடும்பம் விடி காலைக்கு முன்னதாகவே கிணற்றடிக்கு செல்லத் தொடங்குகிறது......

## 4

திருப்பொற் சுண்ணம் இடித்தாயிற்று. பஞ்சாட்சரத்தின் சடலத்திற்கு இறுதி மரியாதைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விம்மல்... அழுகை எங்கும் நிறைகிறது. பெண்கள் பெருங்குரல் எடுத்து அழுகிறார்கள்......

பெட்டி...... பெட்டி....

பெட்டி வருகிறது......

கிரியைகள் தொடர, பேச்சுக்கள் கிசுகிசுக்கின்றன

பெட்டியைக் கொண்டு வாறது பெரும்பாடாப் போச்சு... பெட்டி எடுக்கிற இடத்தில வைத்து மறிக்கிறாங்கள் ... யாருக்கு.. எங்க செத்தது எண்டு ஆயிரம் பதில் வழி வழிய சொல்லிக் கொண்டு வர வேண்டியுள்ளது...... பெட்டிக்குத் தேவையான மரங்களில்லை எண்டு பெட்டி செய்யிறவன் அழுகிறான் .. வரேக்க இந்தப் பெட்டி ஒன்று தான் கடைசியாகக் கிடந்தது... அவனும் கடையைப் பூட்டிக் கொண்டு போறான்......

''வேலிகளில்லாததால், பெட்டி வாசலால் வருகிறதா... வீட்டைப் பிளந்து கொண்டு வருகிறதா என்று புரியாத நிலையில் பாடையும் மக்களுமாகத் தெருவில் இறங்குகின்றனர் தூரத்தே வெடிச்சத்தங்கள் கேட்கின்றன.

## 5

சுடலையில், மண்டபத்தில் மீண்டுமொருமுறை சடங்குகள் நடக்கின்றன. பெட்டியில், இருந்து சடலம் 'பச்சைப்பன்னாங்கு' க்கு மாற்றப்பட்டு சைவக்காரருக்கான இறுதிக் கிரியைகள் மிக வேகமாக .....

சுடலைக்கு வந்தவர்களுக்கோ வீடுகளுக்குத் திரும்பும் அவசரம் ... மந்திர கோஷங்களும்...... யாககுண்டப்புகையும் ...,... எங்குஞ்சூழ ......

சுடலை கட்டைகுத்தி தனது உதவியாளர்களுடன் சிதையை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கிறான்......... கிடைக்கப் போகும் துணி மணி... சாராயத்திற்கான காசு...... என்பனவற்றின் நினைவில் படு உற்சாகமாக...... கட்டைகளை அடுக்கி...பக்க அணையாக கம்பிக் கட்டைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்து... வாகாகப் பற்றி எரிய பழைய ரயர்களை யும் காற்று வீசும் திசை பார்த்து காய்ந்த தென்னோலை காவோலைகளை அடுக்கி...... அவன் காத்திருக்கிறான்.

சடலம் கிடத்தப்பட்டு, நெஞ்சாங்குத்தி ஏற்றி, அவர் கொள்ளிகுடம் கொண்டு மூன்று முறை சுற்றி தீயிட்டபின் தான் அது நிகழ்ந்தது.

சவப்பெட்டியைக் கொத்தி எரியும் நெருப்பில் சிதையில் போடுவதற்காக கட்டைகுத்தி வேகமாக கோடரியை உயர்த்தினான். யாரோ ஒருவன் வந்து அவன் கைகளைப் பிடித்து நிறுத்தினான்.

என்ன?

கொஞ்சம் பொறு...... பெட்டியை விணாக்காத இப்ப பெட்டி தேவையாக இருக்கு......

அப்படி சவப்பெட்டியை இரவல் கொடுக்கிற வழக்க மில்லை. அதோட இது குருக்கள் வீட்டுப் பெட்டி... அவர்கள் சம்மதமின்றி......

அந்த இளைஞர்கள் குருக்களை நெருங்குகிறார்கள்,

முதல் தடவையாக அவர் முகத்தில் ஒரு புன்னகை மலர்கிறது.

மகனே! ........ நீயே இல்லை...... இதில் உடமை பற்றிய பேச்சு....... வேடிக்கையாக இல்லையா...... தெய்வமானபின் சடங்குகளும் சம்பிரதாயங்களும்... நீ அன்று ஆதிசங்கரரை உதாரணம் காட்டினாய்... ஆனால்... இன்று நீயே... உன் சவப்பெட்டியை இன்னொரு போராளிக்கு உதவப் போறதை நினைத்தால் என் மெய்யே புல்லரித்துப் போகிறது .....

அவரது உள் மனம் ஏதேதோ பேசுகிறது.......

பிள்ளையள் .....என்ன தயங்குகிறீர்கள்... உங்கள் போராட்டங்களின் புனிதமும் பொருளும்...... ஏன் எங்கட வேதத்தின் உட்பொருளும் இப்ப தான் எனக்குப் புரியுது.... ஆனா எப்பவோ புரிந்து கொண்ட என் மகன்.... போங்கள்... கெதியாப் போங்கள....... அந்த அறுவான்கள் இங்க வருமுன் பெட்டியைக் கொண்டு போய் விடுங்கள்...... நிச்சயம் உங்கள் போராட்டம் வெற்றி பெறும் ..... அப்பொழுது .. நாங்கள் எங்கட பிள்ளைகளை இப்படி அநியாயமாகப் பறி கொடுத்துக் கொண்டிருக்க மாட்டம்.

தூரத்தே எதுவோ நொருங்கித் தகர்வது போல் பேரோசை ஒன்று எழுகிறது.

□□□

போராடுவதற்குரிய காலம் வந்துவிட்டது
ஏன் கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கிறீர்கள்

மக்ஸீம் கார்க்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன் அற்றுப் போன நாட்கள்

☐ பாப்பாப்பா

சில மாதங்களுக்கு முன்பு ஒரு இளம் போராளியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவன் வவுனியாவில் பிறந்தவன். அங்கேயே நீண்ட காலம் களத்தில் நின்று போராடியவன் காலில் பலத்த காயம் பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தான். சுகமடைந்த பின்பும் சிறிது ஓய்வு எடுக்க வேண்டும் என்று பொறுப்பாளர் சொன்னதால், வீண் பொழுது போக்காமல், ஆங்கிலம் படித்துக் கொண்டிருந்தான். அன்பாக, பண்பாக பணிவாகப் பேசுவான். அவனுடன் பேசிக் கொண்டிருப்பதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் தோன்றும்.

''இப்படியே இருக்க சோம்பலாய் இருக்கு நான் போகப்போறன்'' என்றான் ஒருநாள்.

''ஏன் தம்பி இங்க இருக்க பிடிக்கவில்லையா? என்று கேட்டேன்,

''இங்க இருக்க வீண் பொழுது போகுது ஐயா... வன்னிப் பகுதியில் 'எங்களுக்கு கன வேலை இருக்கு ...அங்கதான் பெருமளவில் எங்கட மண்ணை ஆக்கிரமிக்கிறான்கள்...... இப்படி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தால் எப்பதான் போராட்டம் முடியிறது... ஆயுதம் பிடித்த கை இது... சும்மா இருக்க சினமாய் இருக்கு'' என்று பதிலளித்தான் அவன்.

என் கண்கள் பனித்தன.

விழுப்புண் படாத நாட்களையெல்லாம் பயனற்றுப் போன நாட்களாக எண்ணிக் கழிப்பவன் வீரன் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு சொன்ன செந்நாப் புலவரை நினைத்து வியந்தேன்.

அவர் அன்று எழுதிய குறள் இது

''விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள் வைக்குந்தன் நாளை எடுத்து'' ☐

O O O

அன்று நான் லெபனானில், பாலஸ்தீனியர்களின் அகதிகள் முகாமில் தங்கியிருந்தேன் அங்கிருந்த ஆண்-பெண் அனைவர் முகங்களிலும் 'தாளமுடியாத சோகம், தார்மீக கோபம், கண்ணீர், அனைத்தும் அகற்ற முடியாத பளபளப் போடு தேங்கியிருந்தன.

அவர்களில் பலர் பெறோர்களை, சொந்தச் சகோதரர்களை சகோதரிகளை, குழந்தைகளை 'இழந்தவர்கள்' இவையெல்லாம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிற, மீட்டுத்தர முடியாத இழப்புகள் தாம்.

ஒருவனின் தாய்நாடு பறிபோனதை எந்த இழப்புக்கு நிகராகச் சொல்ல முடியும்! அது சகிக்க முடியாத ஒன்று. தனித்து விடப்பட்ட ஆவேச உணர்ச்சி அவனுள் நீண்டகாலம் அடங்கியிருக்க முடியாது.

ஆனால் ஒருவனின் தாய்நாடு என்பதை பூமி, செடி, கொடிகள், பூக்கள், நதிகள் என்றெல்லாம் இலகுவில் சொல்லி விளக்கிவிட முடியாது, அது அவனுககு ரத்தமும் சதையும் போல், இதயமும் ஆத்மாவும் போல்.

— ''தாய்நாடு எனும் தொட்டில் பறிபோனபோது''
ரசூல் கம் சதோவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்பியலும் கற்றலும்

சபா. ஜெயராசா

தொடர்பியல் நிலைப்பட்ட பல்வேறு கோட்பாடுகளும் காட்டுருக்களும் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பகுத்து நோக்கலாம். அவை:

(அ) உளவியற் காட்டுருக்கள்
(ஆ) பொறியியற் காட்டுருக்கள்

உளவியற் காட்டுருக்களிலே தகவலின் தாக்க விளைவுகள் பற்றி விரிவாக ஆராயப்படும். தகவலைப் பெறுபவர் அல்லது உள்வாங்குபவரது அறிகையிலும், அனுபவங்களிலும், நடத்தைகளிலும் எத்தகைய மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை உளவியற் காட்டுருக்கள் ஆழ்ந்து நோக்குகின்றன.

தொடர்பியல் என்ற எண்ணக் கருவுக்கும் கற்றல் என்ற எண்ணக் கருவுக்குமிடையே தொடர்புகள் காணப்படுகின்றன. கருத்துக்களை ஆழ்ந்து வற்புறுத்துவதற்கான உளவியல் நடவடிக்கையாக அமைவது 'மீளவலியுறுத்தல்' என்ற உபாயமாகும். கற்பித்தலிலும், தொடர்பியலிலும் மீளவலியுறுத்தல் பற்றி விதந்து பேசப்படுகின்றது.

தகவல் அல்லது செய்தியின் மூலகம், அது கடத்தப்படும் முறைமை, அதன் குறியீடுகளிலே இடம் பெறும் குறுக்கீடுகள் செய்தி பெறுவோனது இயல்பு முதலியவை பொறியியற் காட்டுருக்கள் வழியாக நோக்கப்படுகின்றன. தொடர்பியலும் கற்றலும் பற்றி மேலும் விளங்கிக் கொள்வதற்குக் கற்றல் தொடர்பான படிநிலை அடுக்கமைப்பைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். கற்றல் அடுக்கமைப்பு பின்வருமாறு அமையும்

(அ) சமிக்ஞை கற்றல்
(ஆ) தூண்டி—துலங்கற் கற்றல்
(இ) சங்கிலித் தொடராக்கற் கற்றல்
(ஈ) சொல்லிணைப்புத் தொடர்கள்
(உ) பிரித்தறிந்து கற்றல்
(எ) எண்ணக்கரு கற்றல்
(ஏ) விதிகள் கற்றல்
(ஐ) பிரச்சினை விடுவித்தல்

மேற்கூறிய கற்றல் அடுக்கமைப்பைத் தழுவியே தொடர்பியல் உபாயங்களைக் கையாள வேண்டும்,

திட்டமிட்ட வகையிலே பெருந் தொகையானோருக்குத் தகவல் வழங்குவதற்கும் கற்பிப்பதற்கும் உருவாக்கப் பட்ட அமைப்பே தொடர்பியற் சாதனம் என்று கூறப்படும். அதனூடாகவே செய்தி கடத்தப்படும், சாதனம் எளிமையானதாகவும் இருக்கலாம் சிக்கல் பொருந்தியதாகவும் அமையலாம்,

செய்தி அல்லது தகவல்கள் புலன்கள் வழியாக மூளைக்குச் செலுத்தப்படுகின்றது. செய்தியும், செய்தியை வழங்கும் சாதனமும் வேறு பிரிக்கப்படாத நிலையில்'' சாதனமே செய்தி'' என்றுசிலர் குறிப்பிடுகின்றனர். கற்பித்தலில் ஆசிரியருக்கும் அறிவுக்கும் வேறுபாடு காணப்படாத நிலையும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பியலிலும், கற்பித்தலிலும் அடுத்ததாக "முறையியல்கள்" பற்றி நோக்கப்படுதல் உண்டு. கற்பித்தல் அல்லது செய்தி வழங்கல் வெற்றி பெறுவதற்கு எத்தகைய உபாயங்களைக் கையாளலாம் என்பதை முறையியல் விளக்குகின்றது,

இச்சந்தர்ப்பத்தில் செய்திவழங்குவதன் நோக்கம், செய்தியின் உள்ளடக்கம், செய்திக்குறியாக்கம் அல்லது சங்கேதப்படுத்தல் ஆகியவை சிறப்பாக நோக்கப்படுகின்றன. செய்திக் குறியாக்கல் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட மொழி என்று கூறப்படும். அது சொல்லாகவோ, சமிக்ஞையாகவோ, குறியீடாகவோ அமையும் செய்திக் குறியீட்டைச் செய்தி பெறுபவன் விளங்கிக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களும் எழலாம். இந்நிலையிற் பொருத்தமான குறியீடுகளைத் தெரிந்தெடுத்தல் முக்கியமானதென்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

செய்தியைப் பெற்றுக் கொண்டவரின் நடத்தை இலக்குகள் ஆராயப்படவேண்டுமென்பதும் வற்புறுத்தப்படுகின்றது. இதனை மூன்று பிரிவுகளாக ஆராய்கின்றனர் அவை:

(அ) அறிகை சார் இலக்குகள்
(ஆ) எழுச்சி சார் இலக்குகள்
(இ) உடல் இயக்கம் சார் இலக்குகள்

அறிவு, விளக்கம், பிரயோகம், பகுத்தாராய்தல், தொகுத்தறிதல், மதிப்பிடுதல் முதலியவை அறிகை சார் இலக்குகளிலே இடம் பெறுகின்றன. கோபம், அன்பு முதலிய மெய்ப்பாடுகளைப் பெறுதல் எழுச்சி சார் இலக்குகளில் இடம் பெறும். தரப்பட்ட செய்திகளுக்கேற்றவாறு உடலியக்கத்திறன்களைப் பயன்படுத்தலும், வெளிப்படுத்தலும் உடல் இயக்கம் சார்ந்த இலக்குகளில் நோக்கப்படுகின்றன

செய்தியைப் பெறுபவனது அறிகை அமைப்புக்களிலே முன்னேற்ற கரமான மாற்றங்கள் ஏற்படல் வேண்டும். கற்பித்தலின் பொழுது மாணவரிடத்து முன்னேற்ற கரமான மாற்றங்கள் ஏற்படல் வேண்டுமென ஆசிரியர் எண்ணுகின்றார். உள்ளத்துக்கும் புறவுலகத்துக்கு மிடையேயுள்ள தொடர்புகள் கற்பித்தலினால் ஒருவித ஒழுங்காக்கலுக்கு உள்ளாக்கப்படுகின்றன,

ஒவ்வொரு தொடர்பியற் சாதனமும் தனது இயல்புக்கேற்றவாறு போதனை செய்யும் தூண்டிகளின் பொதிகளாகச் செயற்படும். பொதியின் 'தரம்' பற்றிச் சிந்தித்தல் இன்று உலகளாவிய முறையிலே சிறப்புப் பெறத் தொடங்கியுள்ளது. தெளிவு, கருத்தாழம் சித்திரிக்கப்படும் இயல்பு, சமூக நோக்கு என்பவை தொடர்புச் சாதனங்களின் தரத்தைத் தீர்மானிப்பதற்குரிய கட்டளைகளாக இருக்கின்றன.

தொடர்பியற் சாதனம் ஒன்றை ஒருவர் தெரிவு செய்வதற்கும், தனக்குரிய கல்வியை ஒருவர் தெரிவு செய்வதற்குமிடையே பல ஒப்புமைகளைக்குறிப்பிடலாம். மேற் கூறிய தெரிவுகளிலே பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன,

"தொடர்பியலும், கற்றலும் ஒன்றிணைந்தவை. தொடர்பியல் நுட்பங்களைக் கற்பிப்பவர் தெரிந்திருத்தல் வேண்டும். அவ்வாறே தொடர்பியலாளர் கல்வியியல் உபாயங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) சுயவிருப்புகள்
(ஆ) கிடைக்கக் கூடியனவாயிருத்தல்
(இ) கொள்வனவுத் திறன்
(ஈ) அவற்றுக்கான கணிப்பு
(உ) உளவியல் நிறைவு

சிறந்த தொடர்பியல் வளர்ச்சியிற் செய்தியைப் பெறுபவன் அல்லது கற்பவன் தொடர்பான காரணிகளும் ஆராயப் படுகின்றன. அவர்களின் தனியாள் வேறுபாடு, மொழித்திறன், முன் அனுபவங்கள், எதிர்பார்ப்புக்கள், கவனம், புலக்காட்சித்திறன்; நடத்தை முதலியவை கற்பவன் நிலைப்பட்ட காரணிகள் என்று கூறப்படும்.

தொடர்பியலும், கற்றலும் ஒன்றிணைந்தவை. தொடர்பியல் நுட்பங்களைக் கற்பிப்பவர் தெரிந்திருத்தல் வேண்டும், அவ்வாறே தொடர்பியலாளர் கல்வியியல் உபாயங்களைத் தெரிந்திருத்தல் வேண்டும். தமிழ் மரபிற், பத்திரிகை சஞ்சிகை முதலிய வற்றை நெறிப்படுத்துபவர் '' ஆசிரியர் '' என்று அழைக்கப் படுகின்றார். பாடசாலையிற் கற்பிப்பவரும் ' ஆசிரியர் '' என்றே அழைக்கப் படுகின்றனர். இது எமது மரபிலே சிறப்பார்ந்த ஒரு விருத்தி நிலையைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆங்கில மரபில் '' எடிற்றர் '' எனப்படுபவர் ஒரு போதனாசிரியராக இருத்தல் வேண்டுமென்ற கருத்து இன்று வற்புறுத்தப்பட்டு வருகின்றது. வானொலி, தொலைக்காட்சித் தயாரிப்பாளர்கள் அடிப்படை உளவியல் அறிவையும், கற்பித்தல் தொடர்பான நுட்பவியலையும் அறிந்திருத்தல் வேண்டும் என்ற வேண்டுகோள் செயல் வளம் பெறத் தொடங்கியுள்ளது. ☐☐

●

இப்போதெல்லாம்.........

எங்கள் வானத்தில்
புரட்சிப் புறாக்கள்தான்
அதிகம்!

எங்கள் கிராமத்தின்
வயல்களிலெல்லாம்
சிறகைகள் விழுவதில்லை

எங்கள் தேசவயல்மீது
கழுகுகள் வந்துவிடாமல்
காவல் புரிகிறோம்

எங்கள் தேசத்தின்
விடுதலைக்காகத்தான்
குரல்கள் உரத்து
ஒலிக்கின்றன

## காவல்

☐ மயிலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய
பயணத்தின்
நம்பிக்கைச்
சின்னமான

ஏசியா ● லுமாலா ● ஈஸ்ரன் ● கீரோ
சைக்கிள் வகைகளைப் பெற்றுக்கொள்ள

உங்களுக்கு
யாழ்நகரில்
நல்லதொரு
நண்பன்
"விமாகி"

☐ மின்சாரப் பொருட்கள்
☐ செரமிக் பொருட்கள்
☐ பரிசுப் பொருட்கள்
போன்றவற்றை

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள

"விமாகி"
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிகழ்வில் அன்றைய நினைவுகள்

●

**''நான்கு துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு இளைஞர்களால் என்ன செய்ய முடியும். தம்பிமார் ஒருசிலர் துப்பாக்கியைக் கையில் அதுவும் மறைத்து வைத்துக்கொண்டு ஏதோ எல்லாம் கண்டுவிடலாம் என்று கனவு காண்கிறார்கள்.''**


●

**''விடுதலைப் புலிகள் நன்கு பயிற்சி பெற்றுள்ளார்கள். பல நவீன, புதுமையான கருவிகள் அவர்களிடம் உள்ளன. வயலெஸ், எதிர் தாக்கும் டாங்கிகள், ஏ. கே. 47 5.56 துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களையும் வைத்துள்ளனர் அவர்கள் தாமாகவே சில தொழில் நுட்பங்களை உருவாக்கினார்கள். ஈழம் என்னும் இலட்சியத்திலிருந்து அவர்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்கவில்லை''**

18-03-92 அன்று காலை எங்களூர் வாசிகசாலைக்கு வந்த 'ஈழநாதம்' பத்திரிகையைப் படிப்பதற்கு எல்லோரும் ஒரே நேரத்தில் முண்டியடிப்பதைப் பார்த்தேன். என்ன விஷயம் என்று நானும் எட்டிப் பார்த்தேன். அதற்கு முதல் நாள், மணலாற்றில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், மூன்று கவச வண்டிகள் அழிக்கப்பட்டதாகவும் அப்பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் மிக நீண்ட பட்டியலில் முதலாவதாக குறிப்பிடப்பட்டிருந்த 106, மி. மீ. எம். - 40 பின்னுதைப்பற்ற பீரங்கியின் (R. C. L.) படத்தைப் பார்ப்பதற்கே இத்தனை பேரும் முண்டியடிக்கிறார்கள் எனப் புரிந்து கொண்டேன்.

அதனுடைய நிறை, சுடுதிறன் போன்ற அம்சங்களை வாசித்த இரு இளைஞர்கள் அதைப்பற்றி அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர் அவர்களில் ஒருத்தன், ''அப்ப இஞ்சை இருந்தே பலாலிக்கு அடிக்கலாம் — பேந்தென்ன,'' என்றான், அதற்கு மற்றவன், ''அடிக்கலாம் தானடப்பா... ஆனா, அஞ்சு ஷெல் தானே கிடைச்சிருக்கு'' என்றான். ''அஞ்செண்டா என்ன? ... உந்தப் பசிலன், அருள் எயிற்றினைன் எல்லாம் செய்யிறாக்களுக்கு உதுக்கு ஷெல் செய்யிறது பெரிய வேலையே? என்றான். முன்னவன். அதற்கு மற்றவன்' ஓமடாப்பா' ... அதுவும் சரிதான். ஆனா, காசு தான் கனக்க வேணும். 'இப்பவே போராட்டத்தின்ர பேரால பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பியிட்டு பவுணுக்குச் சுத்துதுகள் சில துகள்!'' என்றான். தொடர்ந்து இதைப் பற்றியே இன்னும் ஏதோவெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



☐ கரும்பறவை

இந்த இளைஞர்களின் உரையாடலை வழக்கமாக சந்தியில் நின்று பொழுது போக்காக புதினம் கதைக்கும் விடயமாக என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை, இந்தத் தேசத்தை நேசிக்கும் மனப்பான்மை தெரிந்தது. அத்துடன் இராணுவ ரீதியாக சிந்திக்கும் — கதைக்கும் பக்குவத்தை எமது மக்கள் பெற்றுவிட்டார்கள் என்பதை உணரும் போது மகிழ்ச்சியாக இருந்தது. ''வரலாறு யாருக்காகவும் காத்திருப்பதில்லை,'' என எனக்குள் நானே சொல்லிக் கொண்டேன்.

'' பின்னுதைப்பற்ற பீரங்கி'' என்ற சொல்லைப் படித்தவுடன் 1983 ம் ஆண்டின் முற்பகுதிக் காலங்கள் எனக்கு நினைவுக்கு வந்தன. அரசியல் ரீதியாக எமக்கும் கூட்டணியினருக்கும் பலப்பரீட்சை நடந்த காலகட்டம் அது. சிறீலங்கா அரச நிர்வாகத்துக்கான சகல தேர்தல்களையும் பகிஷ்கரிக்கக் கோரி வந்த நாம் அந்தக் காலத்தில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் எமது கோரிக்கையை மேலும் வலியுறுத்திய காலம், அது — மிக முக்கியமான பல சம்பவங்கள் நடந்த கால முங் கூட.

அந்தக் காலத்தில் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் கூறினார்; ''ஓர் இனத்தை வீடுதலைப் பாதையில் இட்டுச் செல்வதற்கு துப்பாக்கியில் குண்டுகள் மட்டும் இருந்தால் போதாது; துப்பாக்கியால் எதையும் சாதிக்கலாம் என்பது மடமைத்தனமாகும்; துப்பாக்கிக்கு மேல் பீரங்கி வரலாம் என்பதையும் துப்பாக்கி ஏந்தும் இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' (யாழ் நாவாந்துறையில் இடம் பெற்ற கூட்டணிக் கருத்தரங்கில்—18-5-83 சுதந்திரன்)

'' எந்த ஒரு வன்முறை இயக்கத்திலும் இளைஞர்களைச் சேரவிடாது அவர்களது மனதில் தளர்ச்சியுண்டாக்க எம்மாலான முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.'' ( 29-11 81 ISLAND ) என்று கூறிய அவர் தமது முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையிலேயே இவ்வாறு கூறினார்.

ஒரு காலத்தில் இத்தாலிய இளைஞர்களைகரிபால்டி அழைத்ததுபோல் இங்குள்ள இளைஞர்களை நான் அழைக்கின்றேன்.'' என்று அழைப்பு விடுத்த வாய்தான் பின்னர் பீரங்கிப் பூச்சாண்டி காட்டியது. போராடத் தைரியமில்லாத தாங்கள் ஒதுங்க வேண்டுமென்று அவர் நினைக்கவில்லை

''எனது மகன் பாடசாலைப் படிப்பை மண்ணாக்கி விட்டதைப் பார்த்து விட்டேன். மருத்துவக் கல்லூரியில் பயிலும் எனது இளைய மகனும் அப்படி ஆவதைக் காண நான் விரும்பவில்லை —'' (22-09-82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SUN) என்று சொன்ன காலத்திலேயே அவர் '' குடும்பப் பொறுப்புள்ள அப்பா '' என்ற பதவியுடன் கௌரவமாக ஒதுங்கியிருக்கலாம். ஆனால், அவர் உயிருக்கு உயிராக நேசித்த பாராளுமன்ற ஆசனம் அதற்குத் தடையாக அமைந்து விட்டது.

அந்தக் காலத்தில் அவரது இன்னொரு பிரபலமான வாதம் '' நான்கு துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு இளைஞர்களால் என்ன செய்ய முடியும்? '' என்பது. ஒரு வருஷத்துக்கு முன்னர் தான், '' தம்பி மார் ஒரு சிலர், துப்டாக்கியைக் கையில் — அதுவும் மறைத்து — வைத்துக் கொண்டு ஏதோ எல்லாம் கண்டு விடலாம் என்று கனவு காண்கிறார்கள்!—'' (பண்ணாகம் கூட்ட உரை ;— ஈழநாடு 28-04-82) என்று கூறிய அவர் பின்பு 83ம் ஆண்டு '' நாலு துப்பாக்கியை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும் ?'' என்று கேட்கிறார். அவரது கணிப்பைக் கொண்டே அவர் உணர்ந்திருக்க வேண்டும் — 82ல் ஒரு துப்பாக்கி வைத்திருந்தவர்கள், 83ல் அதை நான்கு மடங்காக்கியிருக்கின்றார்கள் என்று — வருடா வருடம், முன்னைய வருடங்களை விட நான்கு மடங்காக ஆயுதபலத்தைப் பெருக்கக்கூடிய ஆற்றலுள்ளவர்களால் ஏன் விடுதலையைப் பெற முடியாதென்று!

நாலு துப்பாக்கிக் கதையைக் கேட்டவுடன் தலைவர், 08-05-83 அன்று திரு அமிர்தலிங்கம் கலந்து கொள்ளும் கூட்டத்துக்கு (யாழ். ஐந்து சந்தியில் நடைபெற்றது) செல்லக்கிளியம்மான், பொன்னம்மான் கிட்டு, சீலன், முதலானவர்களை அனுப்பி வைத்தார். சிறீலங்கா அரசிடம் திரு. அமிர்தலிங்கம் தனது பாதுகாப்புக்காக வாங்கிய துப்பாக்கியை அவரது மெய்ப்பாதுகாப்பாளரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டு வருமாறு கூறியிருந்தார். துப்பாக்கியைக் கைப்பற்றியவுடன், ''நாலு துப்பாக்கியுடன் உங்களது துப்பாக்கியையும் சேர்த்து ஐந்தாக வைத்திருக்கிறோம்'' என்று சொல்லி விட்டு வருமாறும் கூறியிருந்தார். ஆனால், மெய்ப்பாதுகாவலர் அக்கூட்டத்தின்போதுகாணப்படவில்லை. எங்கு தேடியும் அகப்படவில்லை. ஆகவே, போனவர்கள் வானத்தை நோக்கிச் சுட்டு கூட்டத்தை நிறுத்தினர்; பயந்து ஓடிய மக்களை, உங்களை ஒன்றும் செய்யமாட்டோம், என்றுகூறி அவர்களது பதற்றத்தை தணிய வைத்தார்கள் பின்னர், செல்லக்கிளி அம்மான் அமிர்தலிங்கத்தை பார்த்து கேள்விகள் கேட்டார்: ''முப்பது வருஷமாக என்ன செய்தனிங்கள்? நாங்கள் இஞ்ச பத்து வருஷமா அலையிறம். இந்த நேரத்திலயும் தேர்தல் தேவையா?'' இந்தக் கேள்விகளுக்கு அவரால் என்ன பதில் கூறமுடியும்?

பின்னர், '' நான் மாட்டன் மாட்டன் எண்டு தான் சொல்லுறன். திரும்பத் திரும்ப இவரோடதான் எனக்கு டியுட்டி போடுயினம்'' என்று சலித்துக் கொள்ளும் அவரது சாரதியிடம் அவரது காரின் திறப்பை வாங்கிக் கொண்டு அதில் ஏறிச் சென்றனர். அந்த ஐந்தாவது துப்பாக்கி கிடைக்காத ஆத்திரத்தை கோம்பயன் மணல் சுடலையடியில் இருந்த மதகுடன் அவரது காரை மோதித் தணித்துக் கொண்டனர்.

அந்தக் காலத்தில் கூட்டணியினருக்கு ஒரு விசித்திரமான சங்கடம் ஏற்பட்டது. இது பொதுவாக தேர்தலில் போட்டியிடும் எவருக்குமே ஏற்படாதது. இத்தேர்தலில் கூட்டணி. ஐ. தே, க, தமிழ்க் காங்கிரஸ் ஆகிய 3 கட்சிகள் போட்டியிட்டன. (பருத்தித்துறையில் மட்டும் நவசமசமாயக் கட்சியும் போட்டியிட்டது.)

பருத்தித்துறை நகரசபைக்கு போட்டியிட்ட தலைமை வேட்பாளர் இரத்தினசிங்கிங்கம்' வல்வெட்டித்துறை அமைப்பாளர் இராசரத்தினம், சாவகச்சேரி நகரசபைக்குப் போட்டியிட்ட தலைமை வேட்பாளர் முத்தையா ஆகிய ஐ. தே. கட்சியினருக்கு ஒரே நாளில் எம்மால் மரணதண்டனை வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஐ' தே. கட்சியின் வேட்பாளர்கள் நாளாந்தம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாங்கள் போட்டியிலிருந்தும் கட்சியிலிவிலகுகின்றோம்'' என்று ஈழநாடு பத்திரிகைக்கு அறிக்கை விடுத்தனர், அத்துடன் தப்பித் தவறி அவர்களைத் தேடி நாங்கள் சென்றால் எமக்குக் காட்டுவதற்காக ஈழநாடு பத்திரிகைப் பிரதியையும் கைவசம் வைத்துக் கொண்டு இருந்தனர். இதன் உச்சக் கட்டமாக சாவகச்சேரியில் போட்டியிட்ட ஐ. தே. க. வேட்பாளர்கள் கூட்டாக ஒரே கடிதத்தில் தமது ராஜினாமாவை அனுப்பியிருந்தனர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் இரட்டையர்களான திரு. குமார் பொன்னம்பலம் மோதிலால் நேருவையும் சீலன், பண்டிதர் ரகு, நான் ஆகிய நால்வரும் சென்று, சந்தித்து இத் தேர்தலிருந்து உங்கள் கட்சி விலகிக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதன்படி காங்கிரசும் இத்தேர்தலிலிருந்து தாங்கள் வாபஸ் .பெறுவதாகவும், இத் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கோரியிருந்தது, (இதற்குள் கூட்டணியின் யாழ். மாநகரசபைத் தலைமை வேட்பாளர் சட்டத்தரணி நாகராஜா இரு தடவைகள் ராஜினாமாச் செய்திருந்தார்.)

போட்டியிடும் 3 கட்சிகளுள் காங்கிரஸ் முற்றாகவே விலகி விட்டது, ஐ. தே, கட்சி வேட்பாளர்கள் கட்சியிலிருந்தே விலகி விட்டனர். இந்நிலையில் யாருடன் போட்டி?— இப்படியும் ஒரு சிக்கல் அவர்களுக்கு ஏற்பட்டது இதற்காக திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியிலிருந்த கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் கூடினர். ஒவ்வொரு கூட்டணி வேட்பாளர் வீட்டிற்கும் சென்று, அவர்களிடம் எமது கோரிக்கையை ஏற்றுப் பகிஷ்கரிக்கும்படி கேட்டு வரும் போது அவர்களது மனைவியரிடம். ''அக்கா, நீங்களும் ஒருக்கா விளங்கப்படுத்துங்கோ!, என்று வேண்டுகோள் விடுத்துக் கொண்டு வரும் வழியில் தான் இப்படியொரு கூட்டம் இன்று இருக்கின்றது என அறிந்தோம். இது நல்ல சந்தர்ப்பம்; எல்லா வேட்பாளரையும் ஒரே இடத்தில் சந்திக்கலாம் எனவே, செல்லக்கிளி அம்மான், பொட்டு நான் ஆகிய மூவரும் அங்கே சென்றோம்.

எனக்குக் கவலையேற்படும் போதெல்லாம் நான் இந்தக் காட்சியைத் தான் நினைப்பேன் இக்காட்சி சூழ்நிலையை மறந்து என்னைச் சிரிக்க வைக்கும் ஒரு கதிரையில் அமிர்தலிங்கம் உட்கார்ந்திருந்தார், அவரைச்சூழ வேட்பாளர்கள் நின்றிருந்தனர். கூட்டத்தோடு கூட்டமாக நாங்களும் அவர்களிடையே கலந்து கொண்டோம். சில வேட்பாளர்களுக்கு மட்டுமே விஷயம் புரிந்தது. சிலர் செல்லக்கிளி அம்மானை அடையாளங் கண்டு கொண்டனர். பொட்டுவையும் கூட்டணியில் சிலருக்குத் தெரிந்திருந்தது இதில் நான் மட்டுமே யாரோ ஒரு இளைஞன். விஷயம் தெரிந்தவர்கள் பேசாமல் நிற்க மற்றவர்கள் கையைக் கட்டிக் கொண்டு திரு. அமிர்தலிங்கத்துடன் கதைத்துக் கொண்டிருந்தனர். ''இவன் பிரபாகரன் எங்களை றிசைன் பண்ணச் சொல்லுறான்........'' என்று ஒரு வேட்பாளர் தயங்கித் தயங்கிச் சொன்னதும் அமிர் சீறி விழுந்தார் ''பிரபாகரன் ஆர் சொல்லுறது நான் சொல்லுறன் தேர்தலில நில்லுங்கோ எண்டு.''

இதற்குள் ஒவ்வொருவரும் ஆளுக்காள் சைகை காட்டி மெல்ல மெல்ல விலகத் தொடங்கினர். கூட்டமாகப் போனால் விஷயம் விளங்கி விடும் என்பதால், ஒவ்வொருவராகப் போய் அந்த வீட்டுக் கேற்றடியில் நிற்கத் தொடங்கினர். ஒரு மாதிரியாக திரு அமிருக்குப் பக்கத்தில் நின்றவருக்கும் விஷயம் விளங்கிவிட்டது. அவரின் தலைவருக்கு விஷயத்தைச் சொல்ல வேண்டும். எதிரிலோ நாங்கள். மிகப்பரிதாபமான நிலையில் இருந்தார் அவர். 'உஷ்...உஷ்... என்றவாறே தலையைச் சொறிந்தார். திரு. அமிர் ''என்னடா...... என்னடா...... என்னெண்டு சொல்லடா...... என்றார். அவர் எப்படிச் சொல்வார்; பாவம்! எங்களுக்குச் சிரிப்பையடக்க முடியவில்லை. மெல்ல, அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருந்து விலகி வாசலுக்கு வந்தோம். அவ்வளவு தான். கூட்டணித் தலைமை காரியாலயத்தில் உள்ள மணியண்ணையையும் யாழ். எம். பி. யோகேஸ்வரனையும் தவிர ஏனையோர் அனைவரும் வாசலுக்கு வந்து விட்டனர்.

வாசலில் எமது கருத்தரங்கு தொடங்கியது '' நீங்கள் நன்மை செய்யா விட்டாலும் தீமை செய்யாமலிருங்கோ! ' என்ற ஆரம்ப வேண்டுகோளுடன் செல்லக்கிளி அம்மான் கருத்தரங்கை ஆரம்பித்தார். உள்ளேயிருந்து வந்த திரு. யோகேஸ்வரன் பெருவிரலில் நின்று எட்டிப்பார்ப்பதும் திரு. அமிர்தலிங்கத்திடம் ஓடுவதுமாக இருந்தார். எமது கருத்தரங்கு முடியும் வரை இது நடந்தது. பொட்டுவும் நானும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம் (இத் துண்டுப் பிரசுரத்தின் வாசகங்களை தலைவரே தயாரித்திருந்தார்.)

ஏன் இந்தத் தேர்தலை நீங்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்பதற்கான நியாயங்களையும் கூட்டணித் தலைமையின் துரோகத்தனங்களையும் செல்லக்கிளி அம்மான் வெளிப்படுத்தினார். கொஞ்சங் கொஞ்சமாக வேட்பாளர்களுக்கு எம் மீதிருந்த பயம் மறையலாயிற்று. பின்னர், அவர்கள் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். மூவரும் மாறி மாறிப் பதிலளித்தோம். (மாதிரிக்கு இரண்டு)!—

கேள்வி;— ''எதிர்க்கட்சித் தலைவர் பதவியிருந்தால் எங்கட போராட்டத்தைப் பிரச்சாரப்படுத்த வாய்ப்பெல்லோ? ''

பதில்;— ( செல்லக்கிளியம்மான் ):— ''என்னத்தைப் பிரச்சாரப்படுத்தப் போறிங்கள்? இந்தியாவில அணிசேரா மாநாடு நடந்தது. அமிர்தலிங்கம் என்ன செய்தவர்? ஜே. ஆரோடு பேசவே அவருக்கு நேரம் போதாது! என்ன பிரச்சாரம் செய்தனீங்க? அங்கெ வந்த ஒவ்வொரு நாட்டுத் தலைவருக்கும் எங்கட பிரச்சினையை நாங்களும் புனொட்டும் தான் துண்டுப் பிரசுரமாக் குடுத்தம். மற்றது இந்தியாவில் இருக்கிற நெடுமாறன் செய்யிற அளவுக்கு உங்களால ஏன் முடியேல்ல? உங்கட எதிர்க்கட்சித் தலைவர் பதவியால என்ன நன்மை.

கேள்வி:— ''எண்டாலும் எங்களை நாங்களே ஆளுற இந்த உள்ளூராட்சியை யு. என். பிக்காறரிட்டை விடேலுமே? இந்தச் சந்தர்பத்தையும் விட்டிடேலுமே? ''

பதில்;— ( நான் ) '' எங்களை நாங்கள் ஆளுறதோ ? போன உள்ளூராட்சித் தேர்தலில் திருக்கோணமலையில் போட்டியிட்ட வெற்றிவேலு என்ன சொன்னவர்? திருமலை பஸ் நிலையப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவன் எண்டவர். நகர சபைக்குச் சொந்தமான பஸ் நிலையப்பகுதிக்குள்ள சட்டவிரோதமா கடை போட்டுக்கொண்டு கலவரங்களில முழுமூச்சா ஈடுபடுற அவங்கள தன்னைத் தானே ஆளுற உள்ளூராட்சி அதிகாரத்தால என்ன செய்ய முடிஞ்சுது? ஏன் ? வவுனியவில நகரசபைக்குச் சொந்தமான இடத்தில திடீரெண்டு கொண்டுவந்து வச்ச புத்தர் சிலையை உங்களால அகற்ற முடிஞ்சுதே? அதுக்கு இப்ப பொலீஸ் காவலுமெல்லே? ஜனாதிபதி வரைச்சும் போனீங்கள்; அவரும் அகற்றுறனெண்டார். என்ன நடந்தது? ஏன்? நான் கேக்கிறன் — யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்னால புத்தர் சிலைய கொண்டந்து வச்சா உங்களால என்ன செய்ய முடியும்? தங்களைத் தான் ஆளுறதெண்டா இதுக்கென்ன செய்யிறதெண்டு சொலுங்கோ ! வவுனியாவில புத்தர் சிலையை அகற்ற — திருகோணமலை பஸ்நிலையத்தில சட்டவிரோதமா குடியிருக்கிற காடையரை வெளியேற்ற உங்களால முடியுமெண்டா? இந்தத் தேர்தலியும் போட்டியிடுங்கோ! '' ஒரு வேட்பாளராவது இதற்குப் பதில் கூறவில்லை.

அத் தேர்தலில் எமது பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்குக் கிடைத்த ஆதரவு கூட்டணியினருக்கு எச்சரிக்கையாக இருந்தது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கட்டத்தில் கூட அவர்கள் போராட்டத்தின் பக்கம் நிற்க முயற்சிக்கவில்லை.

''எந்த அரசியல்வாதியும் தமிழீழம் என்ற சொல்லை உச்சரிக்காமல் இங்கே அரசியல் நடத்த முடியாது என்ற உண்மையை எதிரிகள் கூட மறுக்கமாட்டார்கள் — ''(தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. இல் இடம்பெற்ற' களத்தில் அமிர்' என்ற நூல் வெளியிட்டு விழாவில் —02. 05. 83 விரகேசரி) என்று தானே கூறியதை அமிர் மறந்ததால் மக்களும் அவரை மறந்தனர். ''நான்கு துப்பாக்கியை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?'' என்று திரு. அமிர்தலிங்கம் கேட்டது போலவே'' கெரில்லாத் தாக்குதல் மூலம் மக்களை அணிதிரட்ட முடியாது'' என்று தமது கோழைத் தனங்களை சித்தாந்தப் போர்வை கொண்டு மறைத்தன பெரும்பாலான இயக்கங்கள். ஆயினும், பின்னர் மெல்ல மெல்ல எமது வழிக்கே வரவேண்டிய தேவையை வரலாறு அவர்களுக்குப் போதித்தது.

இப்போது துப்பாக்கிக்கு மேல் பீரங்கி என்ன, உலங்கு வானுர்திகள், குண்டுவீச்சு விமானங்கள். பீரங்கிப் படகுகள் என்பன வந்து விட்டன. அமிர்தலிங்கத்தின் அன்றைய கேள்விக்கு எமது மண்ணில் — எம்மீது போர்தொடுத்த இந்தியப்படையின் தளபதி ஜெனரல். ஹர்கீர்த்சிங் இவ்வாறு பதிலளிக்கிறார்: '' விடுதலைப் புலிகள் நன்கு பயிற்சி பெற்றுள்ளார்கள். பல நவீன, புதுமையான கருவிகள் அவர்களிடம் உள்ளன. வயர்லெஸ், எதிர் தாக்கும் டாங்கிகள், ஏ. கே. 47, 5.56 துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களையும் வைத்துள்ளனர். அவர்கள் தாமாகவே சில தொழில் நுட்பங்களை உருவாக்கினார்கள். ஈழம் என்ற இலட்சியத்திலிருந்து அவர்கள் ஒரு போதும் விட்டுக் கொடுக்கவில்லை—'' (பம்பாயிலிருந்து வெளியாகும் 'வீக்லி இதழில்)

ஜெனரல் ஹர்கீர்த்சிங்கின் கூற்றை சிறீலங்காவின் கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றார்;' தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது உலகிலேயே மிகத் தலைசிறந்த ஒரு கெரில்லா அமைப்பாகும், இந்த இயக்கம் சிறந்த பயிற்சியையும் இறுக்கமான கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு தலைமை தாங்கி சிறீலங்கா பாதுகாப்பு படைகளுக்கு எதிராக யுத்தத்தை நடாத்தி வரும் பிரபாகரன் ஆற்றலுள்ள தலைவர் என்பதை நிருபித்துள்ளார்—'' (08. 03. 92 சண்டே ரைம்ஸ்.)

● ● ●

''சுதந்திரத்தையும்விடுதலையையும் விட அரியபொருள் வேறொன்றும் கிடையாது. நமது நாட்டை இழந்து மீண்டும் அடிமைப்படுவதைவிட அனைத்தையும் நாம் தியாகம் செய்வோம்''

''மக்களுடைய நலன்களுக்காகப் பாடுபடுவதைவிட அழகுமிக்கதும், அற்புதமானதுமான எதுவும் சமுதாயத்தில் கிடையாது.

நன்றி — ஹோ. சி. மின்
வியட்நாமின் விடிவெள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் துயிலுதியோ? இதுஎங்கள் திருநாடு!
பண்ணூறும் தமிழெடுத்துப் பலநூறு கலை தொடுத்து;
விண்ணூர வைக்கின்ற, வினையெல்லாம் முடிக்காமல்
இன்னுந்தான் துயிலுதியோ? இது எங்கள் திருநாடு!

● ●

# தந்தையர் திருநாட்டின் தப்பான தூக்கம்

□ ஜெ. கி. ஜெயசீலன்

சொல்லறியாப் பேதையிடம்;
சுவையறியாப் பேயரிடம்
வெல்லத் தமிழ் கிடந்து,
வேதனையின் வசமாக;
மெல்ல நம் தமிழரெல்லாம்,
மேதைகள் போல் தூங்குகிருர்!
குள்ளமனத் தமிழா உன்
குறட்டை ஒலி நிறுத்தாயோ!?

● ●

பள்ளியிலே தமிழ்கிடந்து,
பாடாய்ப் படுகிறது!
அள்ளி எடுக்குங்கால்,
ஆருகித்; தேனாகும்
வெள்ளித் தமிழ் இங்கே,
விழி பிதுங்கித் துடிக்கிறது!
கொள்ளியெல்லாம் வைத்து விட்டே,
கொள்கின்ருேம் பெருந்தூக்கம்!

● ●

''ஓ எல்'' தமிழுக்கும் ஓயாத ரியூஸன் கிளாஸ்!
''ஏ எல்'' படித்தாலும் எழுத்துப் பிழை நூறு!
'' என்றென்ஸ்'' கிடைத்தாலும்,
- இல்லைத் தமிழ்ப்பேறு!
என்றன் தாய்நாடே! எங்கே தமிழ் கூறு !

● ●

''அம்மா'' எனச் சொன்னால்
''ஆமை'' என்றெழுதும்;
சும்மா தமிழ் படிக்கும்
சுகமான மாணவர்கள்!
எம்மா தீங்கொன்று,
எழுந்திங்கே நிற்கிறது!
இம்மா துயர் கண்டும்;
இன்னும் துயிலுதியோ!?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுக்கி வைத்துப் பணம் பண்ணும்
    பண்பில்லா வியாபாரி! எமை
ஒதுக்கி வைத்து உதைத்து வரும்,
    ஒரு பேயின் அரசாங்கம்! தினம்
புதுக்கி வரும் செய்கைகளால்,
புண்பட்டே விழுகின்றோம்! அட!
பொதுக்கருத்தை மதிக்காமல்
    புல்லர்ய்த் துயிலுதியோ!?

● ●

அநியாயம் நடந்தால் நீர்
    ஆருக்கோ தானென்றே;
தனியாக ஒதுங்கிப் போய்த்,
    தலைசாய்த்துக் தூங்காதே!
துணிவாகப் பாய்ந்தவரின்
    துயர்துடைக்கும் நோக்கோடு;
அணியாகத் திரண்டெழுந்தே
    அடையுங்கள் வெற்றியினை!

● ●

உறிஞ்சிக் கொழுப்பதிலே
    உற்சாகம் காண்கின்ற;
ஊழற் பெருச்சாளி
    ஊடுருவா இடமேது?
நெருஞ்சி முள் மெத்தையிலே
    நித்திரையா கொள்கின்றாய்?
நேசம் மிகு தமிழினமே!
    நீ இன்னும் துயிலுதியோ!?

● ●

வம்பளந்து, ஊர் மேய்ந்து,
    வாழ்வெல்லாம் மற்றவரின்
கொம்பளந்து, குறைசொல்லிக்;
    கூடிக்கொக்கரித்தே;
பண்பிழந்து துயிலுதியோ?
    பாழும் மனிதர்காள்!
தெம்பிழந்து நீவிரெலாம்,
    தெருவினிலே அலைவீரோ!! □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியாத்திரைக் கவிதை எழுதிய மேதை சத்தியஜித்ரே

எண். சண்முகலிங்கன்

இந்தக் குறிப்பை எழுதத் தொடங்குகையிலே, ரேயின் மறைவின் போது அண்மையில் பார்த்த ஒரு கவிதையின் அடிகள் மேலெழுகின்றன. 'கத்தி' கனவுகளில் மிதந்தலே கலையென்ற புத்தியிலே வாழ்வின் திரை கவிதை எழுதிய சத்திய ஜித்ரே! கலைக்கு அர்த்தம் காட்டி என் கண் திறந்த மேதை நீ...''

இந்திய திரையுலகமே சத்திய ஜித்ரேயினால் தான் யதார்த்த கலையுலகைகண்டது என்றால் தவறில்லை. சமூக உணர்வும் கலை நயமும் இணைந்து கனிகின்ற உன்னத திரைக்காவியங்களின் வழி, உலகத் திரையரங்கில் உயர்ந்து நிற்கின்றார்.

அவரது முதல் திரைப்படமான பதர்பாஞ்சலி மற்றும் அபுர் சன் சார், அபராஜித, சாருலதா, அசானி சன்கெற் நாயக் ஆகிய திரைப் படங்களை மட்டும் பார்க்கக் கொடுத்து வைத்தவன் நான். அழகிய ஓவியத்தை, ஆழமான கவிதையை அனுபவிக்கும் உணர்வைத் தரும் சத்திய ஜித்ரேயின் திரைப்படங்களில் ஆடம்பரமோ, அளவுக்கு மிஞ்சிய அலட்டவோ இல்லை.

ரேயின் திரைப்படங்களின் கதை, வசனம், இசை அனைத்தும் ரேதான். பதர் பாஞ்சாலிக்கு மட்டும் ரவிசங்கர் இசையமைத்திருந்தார். பின்னாலே கமராவிலிருந்து 'ரைற்றில்' எழுதுதல் வரை அவரே கவனித்தார். இவ்வாறாக திரைக்கலையின அனைத்து அம்சங்களிலும் ஆற்றல் வளர்த்து, அவர் கண்ட முழுமை அவர் திரைப்படங்களின் வெற்றியின் அடிப்படை ஆகும்.

ரவீந்திர நாத்தாகூரின் சாந்திநிகேதன் கல்வி பொருளாதார யட்டத்துடன் சித்திரக் கல்வி தேர்ச்சியும் பெற்றரே, ஒரு விளம்பர ஓவியராகவே வங்கத்தில் அறிமுகம். வங்காளத்தின் நாவல்கள் பல வற்றுக்கு முகப்பு ஓவியம் வரைந்த நாட்களில் பனர்ஜியின் பதர் பஞ்சாலி ஐ படித்ததன் விளைவே அவரை, திரையுலகுக்குச் கொண்டு வந்ததாக அவரே ஒரு தடவை கூறியுள்ளார். ரேயின் இந்தக் கலையுணர்வின் வித்தாக வங்கத்தின் முக்கிய எழுத்தாளர்களாக விளங்கிய அவரது தந்தையும், தந்தையின் தந்தையும் மூலங்களாயிருந்திருக்க வேண்டும். சாந்திநிகேதன் கல்வியும், தாகூருடனான தொடர்பும் அவரின் கலைப்பண்பை வளர்த்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடமிருந்த அனைத்தையும் போட்டு, பாதிப்படத்தை எடுத்து மீதிக்காய் அலைந்து ஈற்றில் அரசின் உதவியாய் ஒரு லட்சம் பெற்று அதனை நிறைவு செய்து, முதல் திரையீடலிலேயே 1954 ம் ஆண்டின் உலகின் சிறந்த திரைப்படவிருதும் பெற்றவர் ரே. பின்னாலே எத்தனை எத்தனை விருதுகள். மிக அண்மையில் ஒஸ்கார்விருது. கௌரவத்தின் வழி உலகின் முதல் ஆறு திரைக் கலைஞர்களுக்குள் ரேயும் முதன்மை பெறுகிறார் என திரையுலக விமர்சகர் விதந்து நிற்பர்.

இன்றைய திரைக்கலையுலகில் ரேயின் செல்வாக்குக்கு உட்படாத ஆளுமைகளே இல்லையெனலாம். ரேயின் வழியிலும், அவரது தாக்கத்துடன் தத்தமது வழிகளிலும் புதிய புதிய கோலங்களைக்காட்டுவோர் பலர், வங்கத்தின் மற்றொரு திரையுலக ஆளுமையான மிரிணாள் சென், ரேயின் திரையுலக முக்கியத்துவத்தினை ஏற்றுக் கொள்ளும் அதே வேளையில் ''ரே, இந்திய வறுமையை ஒரு அநநியமத்துடன் மேலைநாட்டுக் கற்றறிந்த கலைஞர்களுக்குத்தந்தார், அதற்கு மேல், பிரசாரத்தன்மை தோய்ந்து விடக் கூடிய அரசியல் போன்ற விடயங்களைத் தயாரித்திருந்தார்'' என்று விமர்சிப்பார். சென் இன் விமர்சனங்களுக்கும் விமர்சனம் உண்டு.

அண்மையில் சிங்கள திரையுலக ஆளுமையாக விளங்கும் வசந்த ஒபயசேகரவுடனான ஒரு சந்திப்பில், மிருணாள் சென்னின் படைப்புகளை, விமர்சனங்களை விஞ்சி கன்னடத் திரைக்கலைஞர் அடூர் கோபாலகிருஷ்ணன் ரேயின் வாரிசாய் உயர்ந்து நிற்றல் வெளிப்படும் எனக்கருத்து வெளியிட்டார் இவ்வாறாக விமர்சன கலைகளையெல்லாம் தாண்டிய ஒரு உயர் தனி திரைக்கலை ஆளுமையாய், திரையுலக மேதையாய் சத்தியஜித் ரேயின் தரிசனம் அமைகிறது. □□□

திரை உலகின் உயர்தனி ஆளுமைகளில் ஒன்றாய், இந்த உலகையே தன் திரைப்படங்களின் வழி ஆண்ட கலைஞர், மேதை என்ற பதங்களுக்கு அர்த்தம் தந்த திரைக்கலைஞர் சத்திய ஜித்ரே அவர்கள் பற்றிய நினைவுக் குறிப்பு இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாவசியப் பொருட்களை
நியாய விலையில் பெற்றுக் கொள்ள

குகன் களஞ்சியம்

மக்களின் மனநிறைவுக்கும்
குறைந்த விலையும்
நிறைந்த பலனும்
தருபவர்கள்

குகன் களஞ்சியம்

( பலசரக்குப் பொருட்களின் மொத்த
விற்பனையாளர்கள் )

180, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகர மக்களுக்கு
நம்பிக்கையான சேவை செய்வோர்

ஆர். வி. ஜி. மெடிக்கல்

மருந்து வகைகள், பால்மாவகைகள்
போன்றவற்றை
நியாயமான
விலையில்
பெற்றுக் கொள்ள
வாருங்கள்

## ஆர். வி. ஜி. மெடிக்கல்

504, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தை நெறிப்படுத்துவது கலைஇலக்கியமே

கோ. மகேந்திரராசா

சமுதாயத்தில் எப்பொழுதும் ஒரு எண்ணத்தை உருவாக்குவது சமுதாயத்தை நெறிப்படுத்திச் செல்வது கலை. இலக்கியமேயாகும். கலை வடிவங்கள் முதன்மையானவையாகும். ஆனால் இன்று கலை இலக்கியவாதிகள் குமாயையில் உள்ளனர். பழமையில் இருந்து புதுமைக்கு வர முடியாதுள்ளனர்.

உண்மையில் இவர்கள் விடுதலைப் போராட்டம் வளரும் பொழுது கருத்தை உளவாங்கிக் கொள்ளாதவர்களாவார்கள். இவர்கள் தங்களின் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும், எம்மிடமிருந்து சலுகைகளைப் பெறவும், தங்களுடைய எழுத்தை விற்கின்றார்கள். எனவே இவர்கள் தமது கதைகளில் கலக்கின்றனர்.

அதாவது கதைகளில் இராணுவம் இருக்கும், போராளி இருப்பார். ஆனால் கருத்துகள் விடுதலைப் போராட்டத்தில் மக்களை இணைப்பதாக இருக்க மாட்டாது. இவர்களின் எழுத்துகள் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் ஆனால் போராட்டத்தை மையமாகக் கொண்டது என விளம்பரம் செய்து விடுவார்கள். இவர்களால் போராட்டத்தைப் பற்றியோ போராளியைப் பற்றியோ எழுதிவிடமுடியாது.

பல சந்தர்ப்பங்களில் புதிய அறிமுக எழுத்தாளர்களின் ஆக்கங்களில் கருத்தும் கொள்கையும் ஆணித்தரமாகவும் உறுதியாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததை நான் அவதானித்துள்ளேன். உண்மையில் எமது பழைய பெருமைமிக்க எழுத்தாளர்கள் கூட இவ்வாறான கருத்தைக் கூறியதில்லை. அவர்களின் எழுத்துகள் நழுவல் தன்மையுடையனவாகவும் பிரச்சினையை அல்லது கருத்தைப் பூசி மெழுகி விடுவதாகவுமே இருக்கும். இங்கிருந்து எமது வெளியீடான ''வெளிச்சம்'' சஞ்சிகைக்கு பல ஆக்கங்கள் வருகின்றன. எழுத்துக்கள் தரமானதாகவும் சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாகவுமிருந்தால் அவை நிச்சயம பிரசுரிக்கப்படும். அறிமுகமானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5-4-92 ம் திகதி அன்று
கற்சிலை மடுவில் நடைபெற்ற
எழுத்தாளர்களுடனான
சந்திப்பொன்றில்
கோ. மகேந்திரராசா அவர்கள்
தெரிவித்த கருத்துக்கள்.

தமிழீழத்தில் இன்று மிகப்பெரும்பாலான நிகழ்வுகளின் பின்னணியில் சோகமும் வேதனையுமே உள்ளன. இவற்றை எழுதும் போது அதன் பின்னணியில் சிங்கள அரசு எம் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட அனைத்து அழுத்தங்களைப் பற்றியும் மக்கள் விளங்கிக் கொள்வார்கள். மக்கள் எழுச்சி அடைவார்கள்.

களின் கதையை மட்டும் நாம் பிரசுரிப்பதில்லை. ஏனெனில் எமது போராட்டம் குறுகிய எல்லைக்குள் நிற்காது. வெளிச்சம் சஞ்சிகையின் நோக்கங்களின் ஒன்று அறிமுக எழுத்தாளர்களை ஊக்குவித்தலுமாகும்.

கலை இலக்கியங்களினால் எமது போராட்டத்தை வளர்க்க முடியும். இதை பழையவர்களால் செய்யமுடியாது. தமது வாழ்க்கையில் போராட்டக்கடமையைச் செய்யாதவர்கள் இலக்கியவாதிகள் என சொல்லப்படுகிறார்கள். இவர்கள் மனத்தைக்கிளுகிளுப்பாக வைத்திருப்பதற்காக எழுதுகின்றார்கள். இவ்வாறானவையே தென்னிந்திய திரைப்படங்களுமாகும். இவை வாழ்க்கைக்கு - நடைமுறைக்கு ஒத்துவரா.

இங்குள்ள கலை இலக்கியங்கள் எமது போராட்டத்தைப் போதியளவிற்கு ஆவணபபடுத்தவில்லை. தேசத்தின் நிகழ்வுகளை காவியமாகவோ கதையாகவோ எழுதினால் அவை காலம்காலமாகப் பேணப்படும். பரம்பரை பரம்பரையாகப் பேசப்படும். எமது எழுத்துக்கள் சமகாலத்தை மக்களுக்குப் புரியவைக்க வேண்டும். மக்களால் புரிந்து கொள்ளமுடியாத சிக்கலான விடயங்களை இதமாகத் தெளிவாக்க வேண்டும்.

இன்று மக்கள் மனதிலே நிறைந்து நிற்பவை சோககாவியங்களே! தமிழீழத்தில் இன்று மிகப்பெரும்பாலான நிகழ்வுகளின் பின்னணியில் சோகமும் வேதனையுமே உள்ளன. இவற்றை எழுதும் போது அதன் பின்னணியில் சிங்கள அரசு எம் மீது விதித்துள்ள பொருளாதாரத்தடைகள் உள்ளிட்ட அனைத்து அழுத்தங்களைப் பற்றியும் மக்கள் விளங்கிக் கொள்வார்கள். மக்கள் எழுச்சி அடைவார்கள்,. சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கெதிராகப் போர் தொடுப்பார்கள். இன்றைய எழுத்துக்கள் பெருமளவிற்கு இந் நோக்கில் அமையவில்லை. மரணங்கள் வெறுமனே பட்டியல்களாவே இருக்கின்றன. இவை ஆவணப்படுத்தப்படவேண்டும், அடுத்த தலைமுறையினர் இவற்றை படிக்கும் போது போராட்டத்தை புரிந்துகொள்வார்கள்,

நாம் கதைகளை எழுதும் போது பெரும்பாலும் ஒரு போராளியை மையமாகக் கொண்டே எழுதுகின்றோம். இது பச்சைப்பிரச்சாரமாகவே அமையும். மக்கள் விடுதலையை நோக்கி ஈடுபடமாட்டார்கள். இவ்வறான படைப்புகள் வரவேற்பைப் பெறாது.

ஒரு போராளியின் வாழ்க்கைக் குறிப்பை எழுதும்போது வாசகர்கள் உணர்வு பெறக் கூடிய வகையில் எழுத வேண்டும். □□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையின் சின்னம்
பார்வையின் கூர்மை

**V.T. & சன்ஸ்**

யாழ் நகரில்

42 வருடகால
அனுபவம்
தேர்ச்சி மிக்கவர்கள்

**V. T. & சன்ஸ்**

விழிகளுக்கு ஒளியூட்டவும்
முத்துப் பற்களுக்கும்

**V. T. & சன்ஸ்**

கண்பரிசோதித்து கண்ணாடி வழங்க
உறுதியான, அழகான பற்களைக்கட்ட

**V. T. & சன்ஸ்**

302, மணிக்கூட்டு வீதி.
(எழிலகம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை:
காங்கேசன்துறை வீதி,
(இலங்கைவங்கி அருகாமை)
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரில்
முன்னணி
மருந்து
விற்பனை நிலையம்.

## சிற்றி மெடிக்கல்

488, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

- ☐ மருந்து வகைகள்
- ☐ பால்மா வகைகள்

போன்றவற்றை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன அலங்காரப் பொருட்கள்
எவர்சில்வர் பொருட்கள்
விளையாட்டுப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்திற்கும்

# நியூட்டன் விற்பனை நிலையம்

31, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டு நவீன ஆடைகள்
புடவை வகைகள்
சிறுவர் உடைகள்

சகலதையும் பெற்றுக்கொள்வதற்கு,

# ஏ. ஜே. எம். புடவைமாளிகை

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

147, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org